Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 255

புதன்கிழமை
07 ஓகஸ்ட் 2024

ஆடி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

முச்சந்தி முரளி



“கச்சதீவுக்குப் பதிலா காங்கேசனை மடக்க பிளான் போடுகினமோ?”

# காங்கேசன் துறைமுகத்தில் கண்வைக்கிறது இந்தியா!

## 30 ஆண்டு குத்தகைக்கு இலங்கையிடம் கோரிக்கை




கொழும்பு, ஓகஸ்ட் 7

காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்திக்காக 62 மில்லியன் அமெரிக்க டொலரை மானியமாக வழங்க இந்தியா முன்வந்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் துறைமுகத்தை 30 வருடங்களுக்கு குத்தகைக்கு எடுத்துக்கொள்ளவும் இந்தியா முயற்சிப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 15

# 2040 ஆம் ஆண்டளவில் நிலையான அபிவிருத்தி

## ஜனாதிபதி ரணில் ஆணித்தரம்



கொழும்பு, ஓக. 7

2040 ஆம் ஆண்டளவில் நிலையான அபிவிருத்தியை அடைவதற்கும், கார்பன் வெளியீட்டை பூச்சிய நிலையில் வைத்திருப்பதற்குமான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்கின்றன என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

சுற்றாடல், சமூக மற்றும் 15

# அநுரகுமாரவிடம் ஆட்சியை ஒப்படைக்க மக்கள் தயார்

## விஜித ஹேரத் உறுதி



கொழும்பு, ஓக. 7

இப்போதுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்து நாட்டை அதலபாதாளத்திலிருந்து மீட்டெடுக்கின்ற வேலைத்திட்டத்தைக் கொண்டுள்ள அநுரவிடம் நாட்டை ஒப்படைக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள் - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தேசிய 15

வங்கிக்கணக்கில் இருந்து

# 65 இலட்சம் ரூபா கையாடல்: பெண் உட்பட இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 7

வங்கிக் கணக்கில் இருந்த 65 இலட்சம் ரூபாவை நூதனமாகக் கையாடல் செய்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 14

# சிறுமியுடன் குடித்தனம்: இளைஞர் கைதானார்!

முல்லைத்தீவு, ஓக. 7

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட தேராவில் பகுதியில் சிறுமியுடன் குடும்பமாக இருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

15 வயதுச் சிறுமியுடன் குடும்பமாக இருந்த 18 வயது இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு 15

# வேலையற்ற பட்டதாரிகள் தேர்தலுக்காகவே பதிவு!

## சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 7

வேலையற்ற பட்டதாரிகளை பதிவு செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்து, அரசாங்கம் பட்டதாரிகளை ஏமாற்ற முயற்சிக்கிறது. இரண்டு வருடங்களாக எந்த நடவடிக்கையும் எடுக்காத அரசாங்கம் தற்போது தேர்தல் நெருங்கும் போது இதனை ஆரம்பித்திருக்கிறது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றஞ்சாட்டியுள்ளார். 15

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக

# தாயகத்தில் போராட்டம்!

## எதிர்வரும் 30ஆம் திகதி முன்னெடுக்க அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 7


சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினமான ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி, ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியை வலியுறுத்தியும், சர்வதேசத்தின் நீதிக்கான தலையிடலை வலியுறுத்தியும் வடக்கு - கிழக்கில் பெரும் போராட்டங்களை 15



# ஆசிரியர் ஒருவர் சடலமாக மீட்பு

வவுனியா, ஓக. 7

வவுனியாவில் தோட்டக் கிணற்றிலிருந்து ஆசிரியர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கிருஷன் என்ற ஆசிரியரே சடலமாக மீட்கப்பட்ட 15



# பெரமுனவின் வேட்பாளராக களமிறங்குகின்றார் நாமல்

கொழும்பு, ஓக. 7

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ச களமிறங்கவுள்ளார் என்று பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரபல கோடீஸ்வரரும், முதலீட்டாளருமான தம்மிக்க பெரேரா, பொதுஜன பெரமுன 15

# கூட்டமைப்பின் ஆதரவுக்காகவா மாகாணசபைத் தேர்தல் திருத்தம்?

## நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கேள்வி

கொழும்பு, ஓக. 7

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலா அவசரமாக மாகாணசபைத் தேர்தல் திருத்தச்சட்டவரைவு கொண்டு வரப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பியுள்ளார். 15

# மாகாணசபை திருத்தச்சட்டம்; 2 ஆம் வாசிப்பு சமர்ப்பிப்பு

கொழும்பு, ஓக. 7

மாகாணசபைத் தேர்தலை பழைய முறையிலையே நடத்து 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்தலுக்கான செலவு 200 மில்லியனைத் தாண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு



கொழும்பு, ஓக.7

வாக்குச்சீட்டின் நீளம் அரை அங்குலத்தால் அதிகரிக்கப்படுமானால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் செலவு 200 மில்லியன் ரூபாவைத் தாண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஒரு வாக்குச்சீட்டின் நீளத்தை அரை அங்குலம் அதிகரித்தாலும், அதனுடன் ஒப்பிடும்போது, அச்சிடுவதற்கான செலவு, வாக்குப்பெட்டிகளின் எண்ணிக்கை, வாக்குப்பெட்டிகளை கொண்டு செல்வதற்கான செலவு, வாக்குச்சாவடிகளில் வாக்குகளை எண்ணும் செலவு, வாக்குப் பெட்டிகளைக் கையாளப் பயன்படுத்தப் படும்தொழிலாளர்களின் எண்ணிக்கை, செயற்பாட்டு அதிகாரிகளின் எண்ணிக்கை போன்ற பல செலவுகள் அதிகரிக்கும். அத்துடன் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அதிகரிப்புடன் ஒப்பிடும் போது அவர்களுக்கு வழங்கப்படும் இலவச அஞ்சல், அவர்களின் பாதுகாப்பு மற்றும் இதர செலவுகளும் அதிகரிக்கும் என்றும் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## திருடர்களுக்கு இடமளிக்கோம்

### தே.மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.7

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் திருடர்களுக்கு இடமளிக்கப்படாது என கட்சியின் அரசியல் பீட உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

அரச சொத்துகளைக் களவாடியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள். செல்வந்தர்களின் பணம் ஏழைகளுக்கு வழங்கப்படும்.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடி நிலையை எதிர்நோக்கி வரும் நிலையில் அதனைத் தீர்க்க எமது கட்சி தீர்க்கமான நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## அரசியலில் இருந்து விலகுகிறார் வாசுதேவ

கொழும்பு, ஓக. 7

செயற்பாட்டு அரசியலில் இருந்து விலகுவதற்கு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் முன்னாள் தலைவரும், இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தீர்மானித்துள்ளார்.

தனது உடல்நிலையைக் கருத்திற்கொண்டே வாசுதேவ நாணயக்கார, அரசியலுக்கு விடைகொடுக்கும் முடிவை எடுத்துள்ளார்.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாகவே ஜனநாயக இடதுசாரி முன்னணிக்கு புதிய தலைவராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நிரோஷன் பிரேமரத்ன அண்மையில் நியமிக்கப்பட்டார். (ச-44)

## தேர்தல் மீறல் இதுவரை 99 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக.7

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சுமார் 99 முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் அநேகமானவை அரச அதிகாரம் மற்றும் அரச சொத்துகளை துஷ்பிரயோகம் செய்துவருகின்றமை தொடர்பானவையாகும் என்று பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அரச வளம், அரச அதிகாரத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இந்த விழாக்கள் மூலம் நேரடியாக பொது மக்களின் பணம் பயன்படுத்தப் படுகிறது என்று பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு, ஓக.7

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்தந்த வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் தனிப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய எதிர்வரும் 15ஆம் திகதி முதல் குறித்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வஞ்சகம் செய்வதில் ரணில் வல்லவர்!

கொழும்பு, ஓக.7

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சிகளை பிளவுபடுத்துவதில் திறமையானவர். கொள்கைகளைமுன்னிலைப்படுத்தி கட்சியுடன் பேச்சுகளை முன்னெடுக்காமல், தனிப்பட்ட முறையில் கட்சியின் உறுப்பினர்களுடன் பேச்சில் ஈடுபட்டு கட்சிகளை பிளவுபடுத்தியுள்ளார்.

-இவ்வாறு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் எமக்கும் இடையில் எவ்வித டீல் அரசியலும் கிடையாது. கட்சியை பாதுகாத்துக் கொள்வதற்காகவே சிறந்த தீர்மானத்தை நாம் எடுத்தோம். கட்சியின் உறுப்பினரல்லாத ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவது சாத்தியமற்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## நாமலின் அவாவால் பெரமுன அழிவுறும்

### சந்திரசேன தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக.7

தலைமைப்பதவிக்கு வரவேண்டும் என்ற அவசரம் நாமல் ராஜபக்சவுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் கட்சி அழியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

-இவ்வாறு ராஜபக்சக்களின் நெருங்கிய சகாவாகக் கருதப்படுவரும்தற்போது ஜனாதிபதிரணில்பக்கம்நிற்பவருமான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்சவுக்கு வரலாறு தெரியாது. 2005 இல் மஹிந்த ராஜபக்சவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் பதவியை வழங்க சந்திரிகா மறுத்தபோது அதற்கு எதிராகவும், மஹிந்தவுக்கு ஆதரவாகவும் செயற்பட்டவனே நான். அன்று முதல் ராஜபக்சவுக்கு உதவி வருகின்றேன். அநுராதபுரம் மாவட்டத்தில் அமோக வெற்றியை பெற்றுக்கொடுத்துவருகின்றேன்.

ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கவேண்டும் என அநுராதபுரம் மாவட்ட மக்கள் என்னிடம் தெரிவித்தனர். அதன்பிரகாரமே எனது முடிவு அமைந்தது.

அநுராதபுரம் மாவட்டத்தில் எனது தலைமைத்துவத்துக்கு நாமல் ராஜபக்சவால் சவால் விடுக்கமுடியாது. தலைமைத்துவப் பதவிக்கு வரவேண்டும் என்ற அவசரம் அவருக்கு ஏற்பட்டுள்ளது." - என்றார். (ச-44)



## இளையோர் வலுவூட்டல் ஐ.ம.ச.கொள்கைத்திட்டம்

கொழும்பு, ஓக.7

இளைஞர்களை வலுவூட்டும் வகையில் நவீன தேசிய இளைஞர் கொள்கையொன்றைக் கொண்டுவரவுள்ளதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் சங்க சம்மேளனத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய வேலைத்திட்டத்தில் பங்குதாரர்களாக இளைஞர்களும் இணைய வேண்டும். இளைஞர்களை அடிப்படையாக கொண்ட கொள்கை வரைப்படவுள்ளது என்றும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.sajith.lk

සමගි ජන සන්ධානය
ஐக்கிய மக்கள் கூட்டணி
SAMAGI JANA SANDHANAYA

அன்பின் சொந்தங்களே,

நாம் தற்போது இருப்பது மிகவும் தீர்க்கமான தருணத்திலாகும். நாட்டின் எதிர்காலம் நலமானதா, இல்லையா என்பதை தீர்மானிக்கும் தெரிவை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு எம் அனைவரின் முன்னாலுள்ளது.

இதுவரை நாட்டை ஆட்சி செய்த பிரிவினைவாத அரசியல் கட்சிகள் எம் அன்புக்குரிய தேசத்துக்கு ஏற்படுத்தியிருக்கும் நிலை எம் அனைவருக்கும் தெளிவாகின்றது. நாம், பிரிவினையின் வலியை அனுபவித்து அதனை தாங்கிக் கொண்டோம். தற்போது, ஒன்றிணைந்து அதை மாற்றுவதற்கான காலம் எழுந்துள்ளது.

நாம் இம்முறை தேசத்தின் அபிவிருத்திக்காக, அனைவரையும் முன்னேறுவதற்கான உரிமைக்காக வாக்கை பயன்படுத்துவோம். காழ்ப்புணர்வை பரப்பும், நெருக்கடிகளை தோற்றுவிக்கும், பொய் வாக்குறுதிகளை வழங்கும் தரப்பினரை நிராகரிப்போம். தேசத்துக்காக வாக்கை பயன்படுத்துவோம்.

பக்கசார்பான ஜனாதிபதியாக இராமல், உங்கள் அனைவரைப் பற்றியும் சிந்திக்கும், ஒரே இலங்கையின் ஜனாதிபதியாக இருப்பேன் என்பதை உங்களுக்கு உறுதியளிக்கின்றேன். நாட்டின் வெற்றிக்கான தீர்மானம் உங்களுடையதே.

**தேசத்தின் நாற்றிசையும் பரந்த மனிதாபிமானத்தின் சகோதர பிணைப்பு ஐக்கிய மக்கள் கூட்டணி கைச்சாத்திடும் சுப வேளையுடன் ஆரம்பமாகிறது. அந்த அற்புதத் தருணத்துடன் நீங்களும் பங்கு கொள்ள ஆகஸ்ட் 08ம் திகதி, காலை 09 மணிக்கு, சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கிற்கு வாருங்கள்.**



சகலருக்கும்
வெற்றி
ஐக்கியமான
நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.7

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்த சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையினையும், சைவப்புலவர், பிரசங்க பூஷணம் செ. த. குமரன் 'சுந்தர மூர்த்தி நாயனார் வாழ்வும் வாக்கும்' எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவையும், சொற்பொழிவில் இருந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-ரி-25,159)

* * *

யாழ்ப்பாணம், ஓக.7

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 17 தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சைவப்புலவர் பிரசங்க பூஷணம் ச. முகுந்தன் 'மாணிக்க வாசகரும் அன்னைப் பத்தும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ரி)




கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'பசுமையும் இயற்கையும்' எனும் தொனிப்பொருளிலான மரம் நடுகை நிகழ்வு அதிபர் தவகீஸ்வரன் தலைமையில் வித்தியாலய வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-25,17)

## ஆடிப்பூர வழிபாடு

யாழ்ப்பாணம், ஓக.7

ஆடிப்பூரத்தை முன்னிட்டு யாழ்.குடாநாட்டு அம்மன் ஆலயங்களில் இன்று சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர விசேட பூஜை வழிபாடு இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது. (ச-25,17)



வண்ணார்பண்ணை சிவன் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்றுசெவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. அடியவர்கள் சூழ சுவாமி தேரில் ஆரோகணித்து வீதி வலம் வந்தார். (ச-17)

## விழிப்புணர்வுப் பேரணி

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ். செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் சு.கணேஸ்வரன் தலைமையில் விழிப்புணர்வுப் பேரணி நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெற்றது. பாடசாலை முன்றலிலிருந்து ஆரம்பமான குறித்த விழிப்புணர்வுப் பேரணி மருதங்கேணிச் சந்திக்குச் சென்று அங்கிருந்து மீண்டும் பாடசாலையைச் சென்றடைந்தது. (ரி-66,27)





அரியாலை பிரப்பங்குளம் மகாகாளி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-45-17)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். பிணக்குகள் நீங்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். ஆதாயம் ஏற்படும். உறவினர்கள் வகையில் சுபச்செய்தி கிடைக்கும்.

**இடபம்:** வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவேண்டிய நாள். பொறுமை அவசியம். வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். பிரச்சினைகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். மனஸ்தாபங்கள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் வகையில் ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**சிம்மம்:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்ப விடயமாக சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். சுபச்செய்தி வரும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவுமிருக்காது. காரியம் இழுபறியாகும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அனுசரித்துச் செல்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைக்கக் கூடும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். ஆதாயம் ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும். அலைச்சல் ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும்.

**மகரம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். முருகப்பெருமான் வழிபாடு நலம் தரும்.

**கும்பம்:** காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். செலவு ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும். ஆதாயம் உண்டு. மகாவிஷ்ணுவை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மீனம்:** பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. சுபச்செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் இணக்கமான அணுகுமுறை அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஒப்புக்குச் சப்பாணி வேண்டாம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரை நாள் தோறும் வேகமெடுக்கத் தொடங்கியுள்ளது. என்றுமில்லாதவாறு இதுவரை 18 பேர் ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியிருக்கின்றனர். வேட்பாளர்களின் எண்ணிக்கையால் வாக்குச்சீட்டின் நீளம் அதிகரிக்கின்றது என்றும், அதனால் 200 மில்லியன் ரூபாவரையில் மேலதிக செலவு ஏற்படும் எனவும் தலையிலடித்துக் கொண்டிருக்கின்றது தேர்தல்கள் ஆணைக்குழு. ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளர்கள் தங்கள் பரப்புரைகளை இப்போதே ஆரம்பித்துவிட்டனர். வடக்கு- கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து இடங்களிலும் அவர்களின் சுவரொட்டிகள் தென்பட ஆரம்பித்திருக்கின்றன. நாடு முழுவதும் புயல்வேகத்தில் பரப்புரைக் கூட்டங்களும் ஒழுங்கமைக்கப்பட்டுவருகின்றன. தெற்கு தேர்தல் பரப்புரையில் பரபரத்துக்கொண்டிருக்க, வடக்கு-கிழக்கு வழக்கம் போன்று தூங்குமூஞ்சித்தனமாகவே இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் பேச்சு அடிபடத் தொடங்கியதுமே இம்முறை தமிழ் மக்கள் சார்பாக பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்று பேச்சு கிளம்பியது. கடந்த காலங்களில் தெற்கு அரசியல் தலைமைகள் தமிழ் மக்கள் தலையில் மிளகாய் அரைக்கும் போக்குக்குப் பதிலடிகொடுப்பதற்கு தமிழ் பொதுவேட்பாளர் விடயம் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்றும் நோக்கப்பட்டது. காலங்காலமாக தேர்தல் காலங்களில் தமிழ் மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி விசிறிவிட்டு, தேர்தல் முடிந்ததும் தமிழ் மக்களுக்கு போக்குக் காட்டிவிட்டுச் செல்லும் தெற்கு அரசியல் தலைமைகளை இம்முறையும் நம்பி ஏமாறாது - அவர்களுக்கும் - சர்வதேசத்துக்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஓங்கி அறைந்துசொல்ல 'தமிழ்ப் பொதுவேட்பாளர்' என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் தமிழ் தரப்புக்குக் கிடைத்திருக்கின்றது. ஆனால் திசைக் கொன்றாக நிற்கும் தமிழ் அரசியல் தரப்புகள் இம் முறையும் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தாமல் - பயன்படுத்தத் தெரியாமல் சொதப்பிவிடும் என்ற அச்சம் இப்போது மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக் கின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் நிலைமையில், பல மாதங்களாக பேச்சுகளில் ஈடுபட்டுவரும் தமிழ்த் தரப்புகள் இன்னமும் 'தமிழ்ப் பொது வேட்பாளர்' யார்? என்பதைத் தீர்மானிக்கமுடியாது திணறி வருகின் றன. தமிழ்ப் பொது வேட்பாளர் யார் என்பதை 'இன்று அறிவிப்போம், நாளை அறிவிப்போம்' என்று அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கின்றன.

'தமிழ்ப் பொது வேட்பாளர்' என்பது தமிழ் அரசியல் தரப்புகள் நினைப்பதுபோன்று இலேசான - இலகுவான விடயமல்ல. 'தமிழ்ப் பொதுவேட்பாளர்' என்ற கருத்தியலை மக்கள் மனங்களில் விதைப்பதற்கு - கொண்டு செல்வதற்கு கால அவகாசம் தேவை. கை காட்டும் நபருக்கு வாக்கிட்டுச் செல்லும் அளவுக்கு, தமிழ் மக்கள் இப்போது தமிழ் அரசியல் கட்சிகள் மீது அபிமானத்தோடு இல்லை. 'தமிழ்ப் பொது வேட்பாளர்' என்பதில் உள்ள சாதகங்களை அவர்களுக்குள் விதைத்தால் மட்டுமே தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளையும் ஒரு புள்ளியில் குவிக்கமுடியும். ஆனால், தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற கருத்துருவாக்கத்தைச் செயற்படுத்துவோர் இவற்றைக் கவனத்தில் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. 'தமிழ்பொதுவேட் பாளர்' ஒப்புக்குச் சப்பாணியாக -எடுத்த காவ டியை ஆடி முடிக்கவேண்டும் என்பதற்காக பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட் டால் அது தமிழ் மக்களுக்கு பாதகவிளைவுகளையே ஏற்படுத்தும். இனியாவது தூங்குமூஞ்சித்தனமாகச் செயற்படாமல் - கள நிலவரத்தை உணர்ந்து தமிழ் தரப்புகள் வேகமெடுக்கவேண்டும்.



# ஜனாதிபதித் தேர்தலுக்கான ஊடக வழிகாட்டல்கள்

## வர்த்தமானி வெளியீடு

**கொழும்பு, ஓக.7**

**ஜனாதிபதித் தேர்தலுக்கான ஊடக வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தலை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலின்போது செய்தி அறிக்கையிடல், பிற அறிக்கையிடல் நிகழ்ச்சிகள், அரசியல் நிகழ்ச்சிகள் மற்றும் பரப்புரைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்பது குறித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, ஊடக உப நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பரிந்துரைகளை வழங்குவதற்கும் பிரதிநிதிகள் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

மின்னணு ஊடக நிறுவனங்கள், இணையத் தளங்கள் மற்றும் சமூக ஊடக இணையத் தள நிர்வாகிகள் மற்றும் அச்சு ஊடகங்களுக்குத் தனித்தனியாக ஊடக துணை நடவடிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

சிரேஷ்ட பிரஜைகளின்

# நிலையான வைப்பு வட்டிவீதம் அதிகரிப்பு

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புத்தொகைக்கான வட்டி வீதத்தை 10 வீதமாக உயர்த்த அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. தற்போது இடம்பெற்று வரும் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார். அதன்படி, தற்போது காணப்படும் 8.5 வீதம் வட்டி வீதம் 10 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது. (ச-இ)



# முட்டை இறக்குமதி கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஓக.7

முட்டைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு அகில இலங்கை கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு முட்டைகளை இறக்குமதி செய்யவுள்ளதாக அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது. அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான இந்தத் தீர்மானத்தைத் தாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசாங்கம் நிவாரணங்களை வழங்கும் பட்சத்தில் முட்டைகளைக் குறைந்த விலையில் விற்பனை செய்யமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# டயானாவுக்கு எதிரான வழக்குத் தள்ளுபடி



கொழும்பு, ஓக.7

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின்பேரில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரித்து உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த மனு நேற்றுமுன்தினம் மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போதே மனுவை தள்ளுபடி செய்ய முடிவு செய்யப்பட்டது. (ச-இ)

# கட்டுப்பணம் செலுத்தினார் அநுர

செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் திசைகாட்டி சின்னத்தில் களமிறங்கவுள்ள அநுரகுமார திஸாநாயக்க நேற்று கட்டுப்பணம் செலுத்தினார். தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வருகைதந்து, அநுரவின் சார்பில் கட்டுப்பணம் செலுத்தினார். (ச-25,44)

**நாளை**

08.08.2024

**வியாழக்கிழமை - ஆடி - 23**

சுபநேரம் : 07.34 - 09.04
ராகுகாலம் : 01.34 - 03.04

**நாளொரு நல்வார்த்தை**

**ஒவ்வொரு வாக்கும்
ஒவ்வொரு
துப்பாக்கி தோட்டாவுக்கு
சமம்.**


*- மல்கம் எக்ஸ் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 • 06 • 1944

உதிர்வு 21 • 07 • 2012



**அமரர் நாகலிங்கம் தியாகராசா**

என்றும் உங்கள் இனிய நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
மகன் - தி. வைகுந்தவாசன்

(cs.55880) N-1)

# தொடர் மணல் அகழ்வு புதையும் கண்டாவளை!

## அதிகாரிகள் அசமந்தம்; மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஓக.7

கிளிநொச்சி மாவட்டத்தில் 16 கிராமங்களை உள்ளடக்கிய கண்டாவளைப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக அரங்கேறி வருகிறது. இதுதொடர்பில் பொலிஸாராலோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளாலோ உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இந்தப் பகுதிகளிலிருந்து தினமும் மணல் அகழ்ந்து எடுக்கப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லப் படுகிறது.

குறித்த விடயம் தொடர்பாக பல தடவைகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டபோது பேசப்பட்ட நேரங்களில் மாத்திரம் மேற்பார்வையிடுவதற்காக அதிகாரிகள் வருகை தருகின்றனர்.

இந்தப் பகுதிகளில் பல அடி ஆழத்தில் மணல் தோண்டப்படுவதால் மழைகாலங்களில் வெள்ளப்பெருக்கால் சிரமங்களை எதிர்கொள்வதுடன் முதலைகளின் அச்சுறுத்தல்களும் அதிகரித் துள்ளது. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து சட்ட விரோத மணலகழ்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-113)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**
**சேர்.பொன்.இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம்**
**சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி**
**நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி**
**சித்திரமும் வடிவமைப்பிலும் சிறப்பு நுண்கலைமாணி கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான உளச்சார்புப் பரீட்சை**
**கல்வியாண்டு 2023/2024**
**மொழிமூலம் : தமிழ்**

மேற்படி நான்கு வருட பட்டப் படிப்புக் கற்கைநெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் 2023/2024 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்தபட்ச தகைமையை பெற்றுக் கொண்டுள்ள தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 06.08.2024 தொடக்கம் 16.08.2024 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான தகைமைகள்**

கர்நாடகசங்கீதம். நடனம். சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்யவிரும்பும் பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது கர்நாடகசங்கீதம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C). மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதாரணதரச் சித்தியும் (S) பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

**மதிப்பீடு செய்யும் முறை**

கர்நாடகசங்கீதம் / நடனம் (பரதம்) - ஆற்றுகைப் பரீட்சை
சித்திரமும் வடிவமைப்பும் - செய்முறை மற்றும் எழுத்துப்பரீட்சை

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளம் ஊடாக தத்தமது விண்ணப்பங்களை நிகழ்நிலையாக (online) 16.08.2024 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கப்பட வேண்டும். பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ/த) 2023 பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டினையும் விண்ணப்பத்துடன் இணைத்துக்கொள்ளுதல் அவசியமானது.

விண்ணப்பித்த பிரதிகளை பதிவிறக்கம் செய்து அதில் கையெழுத்திட்டு க.பொ.த உயர்தர பெறுபேற்று பத்திரப் பிரதி மற்றும் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினையும் விண்ணப்பத்துடன் இணைத்து சிரேஷ்ட உதவிப்பதிவாளர். அனுமதிகள் கிளை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இராமநாதன்வீதி. திருநெல்வேலி எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**சங்கீதம்/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும் 2023/2024**" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 16.08.2024 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அவர்களினால் வழங்கப்பட்ட மின்னஞ்சல் (e-mail) முகவரிக்கு மட்டுமே அனுப்பிவைக்கப்படும். பரீட்சை தொடர்பான அனைத்துத் தகவல்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் அறிவிக்கப்படும்.

**பணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்தி இருத்தல் வேண்டும்.

| கட்டணம் மற்றும் வங்கிக் கணக்கிலக்க விபரம் | | | |
|---|---|---|---|
| இல | கற்கைநெறி | மக்கள் வங்கிக் கணக்கிலக்கம் | விண்ணப்பக் கட்டணம் |
| 1 | கர்நாடக சங்கீதம் | 040002400001622 | 1000.00 |
| 2 | நடனம்- பரதம் | 040002400001630 | 1000.00 |
| 3 | சித்திரமும் வடிவமைப்பும் | 040002400001648 | 2600.00 |


மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பதாரிகள் தங்கள் பாடங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச் சீட்டில் குறிப்பிடவும். இக் கட்டணத்தினை இணையவழி மூலம் மேற்குறிப்பிட்ட கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்ய முடியாது.

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராதவையும். பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாதவையும். க.பொ.த (உயர்தரம்) 2023 பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாதவையும். விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப்பெறாதவையுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி எண் 021 222 6714 அல்லது மின்னஞ்சல் முகவரி: admissions@univ.jfn.ac.lk மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

(cr.43072) (N-1)

**பதிவாளர்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 18.07.1948

மறைவு 06.08.2024

**சின்னத்துரை நிர்மலேந்திரன்**
உத்தரவு பெற்ற நில அளவையாளர்
(Licensed Surveyor) - உரும்பிராய்

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் கொழும்பையும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும், கொண்ட சின்னத்துரை நிர்மலேந்திரன் அவர்கள் நேற்று **06.08.2024** செவ்வாய்கிழமை அன்று இறைபதம் சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான, சின்னத்துரை சிவபாக்கியம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் சௌந்தரம் தம்பதிகளின் மருமகனும், சுசிலாம்பிகையின் அன்பு கணவரும், தீபன் (Structural Engineer -Singapore), நிரோஷன் (Quantity Surveyor- New zealand), சரண்யா (Assistant Accountant- Austraila) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஹம்சினி (Singapore), திவ்யா (New zealand), ஹமிலன் (Engineer-Austraila) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரகதி, தர்மிக், கஜலக்ஷன், கபிக்ஷன், விகாஷன், ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், லவீணா, அக்சயன் ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார். காலஞ்சென்றவர்களான ஜெயேந்திரன், சிரோன்மணி மற்றும் தனேந்திரன், றஜனி ஆகியோரின் சகோதரனும், மகேந்திரன், கமலாம்பிகை, பாலாம்பிகை, லலிதாம்பிகை காலஞ்சென்ற விமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக **07.08.2024** புதன் கிழமை காலை **10.00** மணியிலிருந்து பி.ப **7.00** மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு. **08.08.2024** வியாழக்கிழமை காலை **7.00** மணிக்கு ஈமைக்கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளவும்.**

No: 54,5/2, St.Lawrence Rd, Wellawatte

சுசி: 0771314137 தீபன்: 0764381065
நிரோஷன்: 0764693109 ஹமிலன் : 0740627021

# கசிப்புடன் ஒருவர் மானிப்பாயில் கைது

யாழ்., ஓக.7

யாழ்ப்பாணம், மானிப்பாயில் சட்டவிரோதமான கசிப்பு மற்றும் கசிப்புக் காய்ச்சும் உபகரணங்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றினர். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-25- 20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு நாட்டு மீனவர்கள் விவாதிப்பதற்கு ஏற்பாடு

## இந்தியா இணக்கம்



கொழும்பு, ஓக.7

**இந்திய மற்றும் இலங்கைக் கடற்றொழில் சமூகத்தினருக்கு இடையேயான சந்திப்பின்போது, இந்திய கடற்றொழிலாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க ஏற்பாடு செய்யப்படும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் உறுதியளித்துள்ளார்.**

ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது, இரண்டு நாட்டு கடற்றொழிலாளர்களுக்கு இடையிலான நேரடி சந்திப்பை தமிழக கடற்றொழிலாளர்கள் வலியுறுத்தினர்.

அத்துடன் இலங்கை எல்லைக்குட்பட்ட கடற்பகுதியில் இந்திய கடற்றொழிலாளர்கள் மீது தொடர்ந்து நடத்தப்படும் தாக்குதல்களுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தனர். இதனை ஏற்றுக்கொண்ட ஜெய்சங்கர், கடற்றொழிலாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில், மத்திய அரசு தோளோடு தோள் நிற்கும் என்றும் உறுதியளித்தார். (ச-இ)

# மொட்டு வேட்பாளர் இன்று அறிவிப்பு

கொழும்பு, ஓக.7

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் இன்று பெயரிடப்படவுள்ளார் என்று அக்கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் அறிவித்துள்ளார். தாமரைத் தடாக வளாகத்திலேயே இதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மொட்டுக் கட்சியால் இவ்வாறு பெயரிடப்படும் நபர் இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படுவார் என்றும் அவர் குறிப்பிட்டார். அதேவேளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவே பெயரிடப்படவுள்ளார் எனப் பலராலும் கணிக்கப்படுகிறது. (ச-44)

# அரச நிறுவனங்கள் டிஜிற்றல் மயமாக்கல்

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஓக.7

அரசு ஊழியர்களின் திறன் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக பொதுத்துறையில் தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை ஒருங்கிணைக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அனைத்து அரச நிறுவனங்களாலும் ஒழுங்குபடுத்தப்படும் தகவல், தொழில்நுட்ப அமைப்புகள் மற்றும் தரவுகளை உள்ளடக்கி 4 விடயங்களை கையாள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பித்த விசேட அமைச்சரவைப் பத்திரத்துக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் தொடர்புடைய தரவுகளை மற்ற நிறுவனங்களுடன் முறையாக பரிமாறிக் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# வேலைவாய்ப்பு மோசடி; தகவல்கள் அளிக்கலாம்

கொழும்பு, ஓக.7

கனடாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகப் பணமோசடி செய்யும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவ்வாறு மோசடியில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் தகவல் தெரிவிக்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

அண்மைய காலங்களில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக பல கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தை மோசடி செய்த பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு மோசடியில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் தகவல் தெரிவிக்கலாம்.

011 2 864 241 அல்லது 011 2 864 123 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. (ச-இ)

# இராஜதந்திரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி

இலங்கையின் இராஜதந்திரிகள் மற்றும் அதிகாரிகளுக்கான முதலாவது சிறப்புப் பாடநெறியானது புதுடில்லியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கை வெளிநாட்டு சேவை அதிகாரிகளுக்கான தனிப்பயனாக்கப்பட்ட குறுகிய கால இந்தப் பயிற்சித் திட்டம், இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சி நெறி ஓகஸ்ட் 13 வரை நடைபெறவுள்ளது. முன்னதாக இலங்கையின் உள்ளூர் நிர்வாகசேவையினருக்கும் இது போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# சஜித் பிரேமதாஸவுக்கு த. மு.கூட்டணி ஆதரவு

கொழும்பு, ஓக. 7

எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிடவுள்ள சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே முற்போக்கு கூட்டணியின் தலைவர்கள் மேற்படி தகவலை அதிகாரபூர்வமாக அறிவித்தனர்.

கடந்த பொதுத்தேர்தலில் முற்போக்கு கூட்டணி சார்பில் ஆறு எம்.பி.க்கள் தெரிவாகினர். எனினும், பதுளை மாவட்ட எம்.பி.யான அ. அரவிந்தகுமார் அரசுடன் இணைந்துள்ளார். ஏனைய ஐவரும் சஜித் பக்கம் உள்ளனர். அதேவேளை, ஐக்கிய மக்கள் கூட்டணி இன்று கொழும்பில் உதயமாகவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழ் முற்போக்கு கூட்டணியும் கைச்சாத்திடவுள்ளது. (ச-44)



# புதினம் தெரியுமோ?

'ஆத்தில போற தண்ணிதானே, அண்ணன் குடிதம்பிகுடி' எண்ட கதையா பொதுவேலையளில ஆரும் கேள்விகேக்கமாட்டினம் எண்ட தைரியத்தில காசை அடிக்கிறது இஞ்ச வழமையாப் போட்டுது. அதுவும் றோட்டுப்போடுற ஆக்கள் இதில பெரும் விண்ணர். ஒரு றோட்டுக்கு ஒப்பந்தம் எடுத்திட்டு அந்தக் காசிலையே பத்துப் பதினைஞ்சு றோட்டைப் போட்டிட்டு, கணக்கைக் காட்டிற சூரர் எல்லாம் இஞ்ச இருக்கினம். அவ்வளவு ஏன், றோட்டே போடாமலும் போட்டிட்டம் எண்டு அலுவல் பார்த்தவையும் இருக்கத்தான் செய்யினம். ஆனால் எல்லா இடத்திலையும் உந்தப்பருப்பு வேகாது. சனம் கொஞ்சம் உரத்துக் கேள்வி கேட்டால்,அந்தப் பயத்திலயாவது றோட்டைக் கொஞ்சம் ஒழுங்காப் போடப்பாப்பினம்.

இப்ப உலகவங்கியின்ர காசில சில றோட்டுகள், ஒழுங்கையளைத் திருத்துற வேலையள் நடக்குது. அதில ஒண்டு பண்டத்தரிப்பு, வடலியடைப்பிலை இருக்கிற ஆஸ்பத்திரி வீதி. மூண்டு மாசத்துக்கு முதல் தொடங்கின இந்த றோட்டு வேலை இப்ப முடிஞ்சு, தாரும் ஊத்தி, அதுக்கு மேல மண்ணையும் போட்டாச்சு. இனியென்ன றோட்டைத் திறக்க வேண்டியதுதான். ஆனாலும் இந்த றோட்டில அங்கத்தை ஊர்ப்பெடியளுக்கு ஒரு சந்தேகம். எதுக்கும் ஒருக்காச் சோதிச்சுப் பாப்பமெண்டு, றோட்டுக்கு மேல சும்மா கையை விட்டுப்பார்த்தால், படைபடையா மண்ணோட சேர்ந்து தாரும் வந்திருக்கு. கொப்பியில ஒட்டின ஸ்ரிக்கரைக்கூட கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான் உரிக்க வேணும். ஆனால் உந்த தார்றோட் அப்பிடிக் கஷ்டப்படுத்தாமல் சும்மாவே கழண்டு வரத் தொடங்க, பெடியள் குழம்பிட்டாங்கள். அதோட உள்ளுக்க கல்லும் ஒழுங்காப் பரவேலை. கண்ட கண்ட கல்லையெல்லாம் ஏதோ ஒப்புக்கு போட்டு சமப்படுத்திப் போட்டும் தாராலையும், மண்ணாலையும் பூசி மெழுகிப் போட்டினம். இதைப்பற்றி ஊர்ப்பெடியள் பேஸ்புக், யூரியூப்களீல பத்த வைச்ச பிறகு எல்லாரையும் கூப்பிட்டு ஒரு மீட்டிங் வைச்சவையாம். அதிலையும் எல்லாருக்கும் முன்னால றோட்டு எப்பிடிக் கிளம்புது எண்டு பெடியள் ஒரு 'டெமோ' காட்ட, றோட்டுப் போடுறதுக்குப் பொறுப்பானவைக்கு முகம் கறுத்துப் போட்டுது. அந்த றோட்டை நல்லபடியா போட்டுத் தாறம் எண்டு சொல்லியிருக்கினமாம். ஆனால் அது நடந்தபிறகுதான் உண்மை.

ஏனெண்டால், சனங்கள் கொஞ்சநாளில இந்த றோட்டு விசயத்தை மறந்திடும் எண்டு அவையள் நினைப்பினம். அப்பிடிக் கன இடங்களில 'நல்லாப் போட்டுத்தாறம்' எண்டு சொல்லிப்போட்டு போனவை இண்டைவரைக்கும் எட்டியும் பாக்கேலை எண்டு சனங்கள் சொல்லுதுகள். அதேகதை வடலியடைப்பு ஆஸ்பத்திரி றோட்டுக்கும் வரக்கூடாது. இப்பிடி அவை 'ஸ்ரிக்கர் றோட்டை'போட்டதுக்குப் பதிலா சாணியால மெழுகியிருந்தால் கூட கொஞ்சநாளைக்கு நிண்டு பிடிச்சிருக்கும். இப்பிடி ஊர்வேலையில வாற காசை அடிச்சு உலைவைக்க நினைக்கிறவை இருக்கும் மட்டும் நாடு எப்பிடி முன்னேறும்?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 32 குழந்தைகள் பலி!

டக்கா, ஓக. 7
பங்களாதேஷில் அண்மையில் பொலிஸாருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் சுமார் 32 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக 'யுனிசெவ்' தெரிவித்துள்ளது. பங்களாதேஷில் கடந்த சில நாள்களாக நடைபெற்ற போராட்டங்களில் 266 பேர் உயிரிழந்ததோடு, 7,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)



# முர்முவுக்கு உயரிய விருது

புதுடில்லி, ஓக. 7
இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு பிஜி நாட்டின் உயரிய, 'கம்பானியன் ஆப் தி ஆர்டர்' என்ற விருது அளிக்கப்பட்டுள் ளது. இந்தியா மற்றும் பிஜி நாடுகளுக்கு இடையேயான வலிமையான உறவுகளை அங்கீகரிக்கும் வகையில் இந்தக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.
இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு 3 நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக, பிஜி நாட்டுக்கு அவர் நேற்று சென்றடைந்தார். இதன்போதே முர்முவுக்கு பிஜி நாட்டின் அதிபர் ரது வில்லியம் விருது வழங்கி கௌரவித்துள்ளார். (ச-இ)

# இராணுவத் தலைமையை ஏற்றுக்கொள்ளோம்

## பங்களாதேஷில் தொடரும் பதற்றம்

டாக்கா, ஓக. 7
இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டுப் பின்னர் தேர்தல் நடத்தப்படும் என்று பங்களாதேஷ் இராணுவத் தளபதி அறிவித்துள்ள நிலையில், போராட்டங்களை மேற்கொள்ளும் மாணவர்கள் அதை நிராகரித்துள்ளனர். இராணுவம் தலைமை வகிக்கும் அரசாங்கம் ஒன்றை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் அறிவித்துள்ளதால், பங்களாதேஷ் இயல்புக்குத் திரும்புவது சிக்கலானதாக மாறியுள்ளது. (எ-இ)

# பூமியை விட்டு விலகும் நிலா

வொஷிங்டன், ஓக. 7
பூமியின் ஒரே ஒரு துணைக் கோளான நிலா பூமியைவிட்டு மெதுவாக விலகிச் செல்வது சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளதாக விஸ்கான் சின்மாடிசன் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.
இதனால் பூமியிலும் பல வித மாற்றங்கள் நடக்கும் எனவும், பூமியிலிருந்து நிலா ஆண்டுக்கு சுமார் 3.8 செ.மீ. வீதம் விலகிச் செல்வதாகவும், இதனால் பூமியில் பகலின் நேரம் அதிகரிக்கும் எனவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.
பூமியில் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் இருக்கும் நிலையில், நிலா விலகிச் செல்வதால் அது 25 மணி நேரமாக அதிகரிக்கலாம் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.
இந்த மாற்றம் சுமார் 20 கோடி ஆண்டுகளுக்குப் பிறகே மாறும். பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான ஈர்ப்பு விசையே இந்த மாற்றத்துக்கு முக்கியமான காரணமாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

# பங்களாதேஷ் வன்முறை; பின்னணியில் சீனா, பாக்.?

யாழ்ப்பாணம், ஓக. 7
பங்களாதேஷில் ஏற்பட்ட வன்முறை, ஷேக் ஹசீனாவின் ஆட்சியை கவிழ்த்தது உள்ளிட்டவற்றின் பின்னணியில் சீனா, பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.
இந்திய உளவுத்துறைக்குக் கிடைத்துள்ள தகவலில், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.எஸ். மற்றும் சீனாவின் பாதுகாப்புத் துறை ஆகியவை பங்களாதேஷில் மாணவர் அமைப்புகளைத் தூண்டிவிட்டு ஷேக் ஹசீனாவின் ஆட்சியைக் கவிழ்த்துள்ளது. இந்தியாவுக்கு ஆதரவாக உள்ள ஷேக் ஹசீனாவுக்குப் பதில் பாகிஸ்தான் நாட்டுக்கு ஆதரவு நிலைப்பாட்டில் இருக்கும் பங்களாதேஷின் தேசியவாதக் கட்சியை ஆட்சிக்கு கொண்டுவர முயற்சிக்கின்றன. பி.என்.பி. கட்சியின் ஆட்சியைக் கொண்டு வருவதன் மூலம் இந்தியாவுக்கு நெருக்கடியளிக்க முயற்சிப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. (ச-இ)

# ஹமாஸுடன் இணைந்த ஐ.நா. பணியாளர் நீக்கம்

லண்டன், ஓக.7
ஹமாஸ் இயக்கத்துடன் இணைந்து போரில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் தனது ஊழியர்கள் 9 பேரை ஐ.நா. பணிநீக்கம் செய்துள்ளது.
கடந்த ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே ஏற்பட்ட போர் தற்போதும் தொடர்கின்றது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர்.
இந்தநிலையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி ஹமாஸ் இயக்கம் நடத்திய தாக்குதலில் ஐ.நா. பணியாளர்கள் சிலரும் பங்கேற்றிருந்தனர் என்று தகவல் வெளியாகியிருந்தது. காஸாவில் செயற்பட்டுவரும் ஐ.நா.வுக்கான பலஸ்தீன அகதிகள் அமைப்பில் உள்ளவர்கள் ஹமாஸ் இயக்கத்துடன் இணைந்து போரில் ஈடுபடுகின்றனர் என்று இஸ்ரேல் குற்றஞ்சாட்டியிருந்தது.
அதையடுத்து, இதுதொடர்பாக ஐ.நா. விசாரணைகளை ஆரம்பித்திருந்தது. விசாரணைகளின் அடிப்படையில் பலஸ்தீனத்தைச் சேர்ந்த தனது 9 ஊழியர்களை ஐ.நா. பணிநீக்கம் செய்துள்ளது. (எ-இ)

# பல உயிர்களைக் காப்பாற்றியவர் மீட்புப் பணிகளின்போது மாயம்

## வயநாட்டில் சோகம்

இந்தியாவின் வயநாட்டில் ஏற்பட்ட மலைச்சரிவில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருந்தநிலையில், மீட்புப் பணிகளில் பலரின் உயிர்களைக் காப்பாற்றிய ஒருவர் தற்போது காணாமற் போயுள்ளார்.
இந்தச் சம்பவம் அந்தப் பிரதேச மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.
கடந்த 30ஆம் திகதி ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கிப் பலர் உயிரிழந்திருந்தநிலையில், பலர் இன்னமும் நிலச்சரிவுக்குள் சிக்கி உதவிகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மீட்புப் பணிகளில் தன்னார்வலர்கள், மீட்புக் குழுவினர், இராணுவத்தினர் ஈடுபட்டுவருகின்றனர்.



அங்குள்ள சூரல்மலைக் கிராமத்தைச் சேர்ந்த லாட் பிரஜீஷ் என்பவரும் இந்த மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். அவர் பலரை மீட்டு உயிர்களைக் காப்பாற்றியிருந்த நிலையில், மீட்பு நடவடிக்கைகளின் போது காணாமற்போயுள்ளார்.
முண்டக்கை பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்ட தகவல் கிடைத்ததும் பிரஜீஷ் தனது ஜீப்பில் அங்கு சென்று, சிக்கியிருந்தவர்களை இருமுறை பாதுகாப்பாக மீட்டு வந்தார். அதன் பின்னர் தனது குடும்பத்தினருடன் பாதுகாப்பான இடத்துக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார். அப்போது அவருக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்ததை அடுத்து, மூன்றாவது தடவையாக ஜீப்பில் மலைப் பகுதிக்குச் சென்றுள்ளார். அதன் பின்னர் அவர் திரும்பிவரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
அவரது ஜீப் சேதமடைந்த நிலையில் மலைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. லாட் பிரஜீஷ்க்கு என்ன நடந்தது என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்தச் சம்பவம் அந்தப் பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07.08.2024
புதன்கிழமை

# புதன் பொய்கை

ஒரு நல்ல நண்பன், நீங்கள் உங்களுக்கே கொடுத்துக் கொள்ளக்கூடிய பரிசு

– லூயிஸ் ஸ்டீவன்சன்

# தனியாளின் சமூகமயமாக்கலில் கல்வியெனும் திறவு கோல்



■ பாலச்சந்திரன் தர்சினி
*கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவி,*
*கல்வி, பிள்ளை நலத்துறை*
*கிழக்குப் பல்கலைக்கழகம்*

சமூக மயமாதலானது மனித நடத்தையோடும், சமூக நடத்தையோடும் தொடர்புடைய ஒரு செயன்முறையாகும். எனவேதான் காலமாற்றத்துக்கு ஏற்ப புதிய பரிமாணங்களையும் பல புதிய விடயங்களையும் உள்வாங்கிக் கொள்கின்றது. சமூகமயமாதல் எண்ணக்கருவை பொறுத்தமட்டில் ஒரு காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. நவீன சமூக மாற்றத்துக்கு ஏற்ப பிறிதொரு காலத்தில் தனது முக்கியத்துவத்தை இழந்துவிடுகின்றது. ஆகையால் சமூகமயமாதல் என்றால் என்ன? என்பது தொடர்பாக ஒரு திட்டவட்டமான வரையறையை முன்வைப்பது இயலாத ஒன்றாக உள்ளது. இருப்பினும் சமூகமயமாதலை வரைவிலக்கணப்படுத்தும்போது ஒரு மனிதன் சமூகத்தோடு இணைந்து வாழ்வதற்காக சமூகம், சமயம், கலாசாரம், பண்பாட்டுகள், ஒழுக்கக்கோவைகள் மற்றும் சமூகவிழுமியங்கள் போன்ற விடயங்களைக் கற்றுவாழும் கருமத்தொடராகவும், ஒருமனிதன் சமூகத்தில் தனிப்பட்ட அடையாளத்தைப் பெற்றுக்கொள்ளவும் தான் வாழும் சூழலுக்கு ஏற்ப இசைவாக்கம் அடையவும் ஒரு சந்ததியிலிருந்து இன்னொரு சந்ததியினருக்கு கலாசாரங்களை இடமாற்றம் செய்யவும் சமூகத்தின் உறுப்பினராக இருப்பதை அறிந்து புதிய உறுப்பினர்களை சமூகத்தில் இணைத்துக்கொண்டு செயற்படுகின்ற சமூகத்துக்கும் தனிநபருக்கும் இடையிலான தொடர்பே சமூகமயமாதல் எனக் கொள்ளலாம்.

ஒரு தனியாளை சமூகத்துக்குப் பொருத்தமான ஆக்கத்திறனுள்ள பூரண மனிதனாக மாற்றுவதில் கல்வியானது பிரதான இடம் வகிக்கிறது என்றே கூறவேண்டும். பாலர் பள்ளியில் வழங்கப்படும் கல்வி மூலம் தனி ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் முதல் தடவையாக சகபாடிக் குழுவினருடன் பழகுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

இங்கே குழந்தை தனது ஒத்த வயதுக் குழந்தைகளுடன் தாம் வாழும் உலகம் பற்றிய பல விடயங்களை அறியவும் விவாதிக்கவும் வாய்ப்புக் கிடைக்கின்றது. தனியாள் சமூகத்தில் மூத்தோர் எவரினதும் குறுக்கீடின்றிச் சுதந்திரமாக ஒன்றுகூடிச் செயற்படுவதற்கான வாய்ப்பினையும் தன்னை நிலைப்படுத்துவதற்கான வழிகாட்டுதலையும் கல்வி மூலம் பெறமுடிகிறது. தனியாளின் ஆளுமையை வளர்த்தெடுத்து அதன்மூலம் சமூக முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லவும், அழியாமலும் பாதுகாக்கும் கருவியாக கல்வி உள்ளது. தனியாளின் விருத்தி ஏற்படும்போதே சமுதாய விருத்தியும் ஏற்படுகின்றது. பிள்ளைகளை வளப்படுத்தி அவர்களை நற்பிரஜைகளாக சமூகத்தினுள் புகுத்தவேண்டிய பொறுப்பு பாடசாலையுடையதாகும்.

கல்வியினால் வாழ்க்கை முறைகள் குறுகியகால இடைவெளியில் மாறிவிடுகின்றன. நாம் கற்றவற்றில் சில விடயங்கள் நமது வாழ்க்கைக்கு பயன்படாத அளவிற்கு இன்றைய சமூகம் விரைவில் மாறிக்கொண்டு வருகின்றது. இதனால் மாறிவரும் விஞ்ஞான தொழில்நுட்ப உலகுக்கு பொருத்தமான கல்வியை தொடர்ந்தும் மாணவர்கள் கற்கவேண்டி உள்ளது.

இதற்குப் பாடசாலையும் சமூகமும் இணைந்து தகுந்த சூழலை ஏற்படுத்தவேண்டும். இலங்கையில் சிறுவர்களையும், இளைஞர்களையும் சமூகமயப்படுத்தும் முறை சார்ந்த நிறுவனங்களாக பாடசாலைகள் திகழ்கின்றன. சமூகத்தின் ஏதாவதொரு செய்முறை மூலம் தனியாளிடம் சிறந்த உளநிலை வளர்ச்சியை ஏற்படுத்துவதே கல்வி.

அதன்மூலமே தனியாள் ஏதாவதொரு துறையில் விசேட அறிவு திறன்களின் தொகுதியைப் பெற்றுக்கொள்கின்றார். இத்தகைய கல்வியினைப் பெற்ற தனிமனிதனைச் சமூகம் 'கல்விமான்' என அடையாளப்படுத்தி பெரும் மதிப்பினையும் அளிக்கின்றது. மனிதனது அறிவு, திறன் வளர்ச்சிக்கான பயிற்சியினைக் கல்வி வழங்கவேண்டும். இதற்காக எண்கணிதச் செயற்பாடுகள், தொழில்நுட்பப் பயிற்சிகள் போன்றவை வழங்கப்படுகின்றன. மனிதன் ஒரு சமூகப்பிராணியாகக் காணப்படுகின்றான். சமூகம், தனியாள் என்ற இரு கூறுகளையும் தொடர்புபடுத்திக் கொண்டு சமூகத்திற்கேற்ற முறையில் தனியாளின் விருத்தி கல்வி மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. கல்வி மனதுக்கும், உடலுக்கும் பயிற்சி அளிப்பதோடு அல்லாமல் சில முக்கியமான நோக்கங்களையும் மனித சமூகத்துக்கு எடுத்துரைக்கின்றது. கல்வியானது சமூகமயமாதலை வெற்றிகரமாகச் சமுதாயத்தில் செய்துமுடிக்க உதவுகின்றது. நவீன சமூத்தில் தனிமனிதனை சமூகமயமாக்குதலை குடும்பம் தவறவிடும் சூழ்நிலையில் இதர அமைப்புகள் அந்தப் பணியைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகின்றன. இதனால் நவீன சமூகத்துக்குப் பொருத்தமானவனாக தனிமனிதனை மாற்றுவதில் கல்வியானது முக்கியமாகப் பங்காற்றுகின்றது.

## பாடசாலையின் வகிபங்கு

பாடசாலைகள் சமூகத்தின் கண்கள் என்று கூறுவர். கண்களின் மூலமே ஏனைய மனிதர்களையும் சமூகங்களையும் ஒரு பாடசாலை பார்க்கின்றது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் கண்ணை முதலில் நோக்குவது போன்று பிற மனிதர்களும் சமூகங்களும் இன்னொரு சமூகத்தை விளிக்க அந்தச் சமூகம் சார்ந்த பாடசாலைகளையே பார்த்து மதிப்பிடுகின்றது. குடும்பப் பின்னணியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு பாடசாலையில் அனுமதிக்கப்படும் பிள்ளையானது பாடசாலையை விட்டு வெளியே செல்லும்போது நடத்தை மாற்றங்களை உள்வாங்கியவனாக சமூகத்துக்கு ஏற்றாற்போல் இசைவாக்கம் மிக்கவனாக சமூகத்தில் கால்தடம் பதிக்கிறான். சாதி, மத பேதமின்றி ஒன்றிணையத் தூண்டுவது கல்வி. மனிதவளம், பௌதீகவளம், நிறுவனவளம், தொழில்நுட்ப வளம் என அனைத்தையும் பாடநூல் உள்ளடக்கியுள்ளது. இவ்வாறான வளங்கள் அனைத்தும் மாணவர்களின் ஆளுமை விருத்தி, சமூகத் தொடர்புகளுக்கான இயலுமை உள்ளவர்களாக உருவாக்குவதனை மையமாக கொண்டிருப்பதனை இனங்காண முடியும். கல்வி நிலையங்கள் எவ்வழியோ சமூகமும் அவ்வழி என்பது நடப்பியலாகும். சமூக உணர்வை வளர்த்தல், சமூக நடத்தைகளுடன் இசைவுபடுத்தல், சமூகக் கட்டுப்பாடுகளுக்கு கீழ்படியச் செய்தல், சமூக விழுமியங்களை புகட்டல். புதிய தொழில்நுட்ப அறிவுக்கு இசைவுபட வைத்தல், சமூக தொடர்பாடலை வளமாக்கிக் கொள்ள உதவுதல் போன்றவற்றுக்கு கல்வி பெரும் பங்காற்றுகிறது. ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாடு அந்த நாட்டின் தனிமனித சக்தியைச் சார்ந்துள்ளது. அந்த நாட்டின் செல்வம் அந்த நாட்டு மக்களின் கல்வித் தரத்தில் இருக்கின்றது. நாட்டில் ஒரு விருத்தி ஏற்பட வேண்டுமாயின் அது தொழிற்கல்வியின் மூலமே சாத்தியமாகும்.

முழுச் சமூகமும் கல்விக்கான தகுதியாக வெறும் சான்றிதழ்களை மட்டுமே வைத்திருக்கும் வகையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் கற்றல், இணைந்து வாழக்கற்றல் எனும் உன்னதமான நோக்கங்கள் அருகிச் செல்கின்றன. இந்த நிலையில் தனிமனிதனுக்குக் கல்வியானது தனது கல்வித்தகுதியை உயர்த்திக்கொள்ள உதவுகின்றது. தனிமனிதனைப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்தல், தகவல்களைத் திரட்டும் ஆற்றல், திறனாய்வுச் சிந்தனை ஆகியவற்றைக் கல்வியானது வழங்குகின்றது. சமூகத்திலுள்ள மனித விழுமியங்கள், குழுச்செயற்பாடுகள் போன்றவற்றை அறிந்துகொள்ளவும், சமூகப்பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வையும் கல்வியானது தனிமனிதனுக்கு வழங்குகின்றது. ஊடகங்களில் வழங்கப்படும் செய்திகளை அறிவதன் மூலம் பல்வேறு நாட்டு நடப்புகளை அறிந்து அதற்கேற்ப நம்மை மாற்றிக் கொள்ளமுடியும். ஒரு பிள்ளையானது பார்வை மூலமோ, கேட்பதன் மூலமோ. செயற்படுவதன் மூலமோ சூழலில் இருந்து பல விடயங்களை உள்வாங்குகின்றது. இதில் சமூகத்தில் நடக்கும் பல விடயங்களினை அவதானித்து எவ்வாறு தானும் செயற்படவேண்டும் என தன்னை மாற்றிக்கொள்கிறான். உதாரணமாக மதுபானம் மற்றும் புகைத்தல் போன்ற தீய பழக்க வழக்கங்களைத் தவிர்த்தல், நன்நெறிப்படி வாழுதல் போன்றவற்றை கற்றுக்கொடுக்கிறது. இதனால் தனியாள் சமூகத்தில் தனது ஆற்றலை வெளிப்படுத்தி ஆக்கத்திறனுள்ள பூரணமனிதனாக செயற்பட வாய்ப்புக் கிடைக்கின்றது. கல்வியினூடாக சமூகத்துக்குப் பொருத்தமான ஆக்கத்திறனுள்ள பூரண மனிதனாக தனியாள் மாற்றமடைவதை அவதானிக்கலாம். ஆகவே தனியாளை சமூகத்திற்குப் பொருத்தமான ஆக்கத்திறனுள்ள பூரண மனிதனாக வடிவமைப்பதில் கல்வியானது பெரும் பங்கினை வகிக்கின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர், பெண்களுக்கெதிராக

# விருட்சமாகும் வன்முறைகள்

சி.கதீசனா
ஊடகக் கற்கைகள்,
யாழ். பல்கலைக்கழகம்

பெண்களுக்கு எதிராக முதன்மையாக அல்லது தனிப்பட்ட முறையில் நிகழ்த்தப்படும் வன்செயல்களை பெண்களுக்கு எதிரான வன்முறை எனக் குறிப்பிடலாம். சில நேரங்களில் வெறுப்பு குற்றமாகக் கருதப்படும். பாதிக்கப்படுபவரின் பாலினத்தை முதன்மை காரணமாகக் கொண்டு இத்தகைய வன்முறை குறிப்பிட்ட குழுவினரை குறிவைக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 25ஆம் திகதி பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இதற்கான தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபை பொதுச்சபையால் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எத்தனை தினங்கள் அனுஷ்டிக்கப்பட்டாலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறைந்ததாகத் தெரியவில்லை என்பதே உண்மை.

**பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எவை?**

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எனும் பொழுது அது உடல் மற்றும் பாலியல் ரீதியானவை மாத்திரமல்ல, பாலின அடிப்படையிலான வன்முறைகளை விளைவிக்கக் கூடிய எந்த ஒரு செயலையும் அது குறிக்கும். தனி நபர் ஒருவருக்கு எதிராகவோ சமுதாயம் ஒன்றுக்கு எதிராகவோ அதிகாரம் அல்லது உடல் வலிமையை வேண்டுமென்றே பயன்படுத்தி உடல் உள ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துதல் அல்லது ஏற்படுத்த எத்தனித்தல் வன்முறைச் செயற்பாடுகளில் அடங்குகின்றன. பெண்களின் முன்னேற்றம் இன்று பல துறைகளில் வளர்ந்து வருகிறது என்பதை மகிழ்வுடன் ஒத்துக்கொள்ளும் நாம் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தீரவில்லை என்பதை அவமானத்துடன் ஏற்றுக் கொள்ளத்தான்வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. மனைவியாக இருந்தாலும் அவரது அனுமதியின்றி உறவுகொள்ள முயல்வது குற்றம் என 'மரிட்டல் ரேப்' பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் ஒரு நாகரிகம் அடைந்த சமூகத்தில் தினம்தோறும் தொடர்ந்து நடக்கும் பாலியல் வன்முறைகள் பெரும் கவலையையும், பதற்றத்தையும் உண்டாக்குகிறது.

**பாலியல் வன்முறைகள் அதிகரிக்கக் காரணம்**

பாடசாலை, பணியிடங்கள், பயணங்கள், வீடுகள், வீதிகள் என அனைத்து இடங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்து வருகின்றன. சிறு பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகள் அன்றாடச் செய்தியாகிவிட்டன. இலங்கையைப் பொறுத்தவரை வன்முறைகள் எனும்போது பெருமளவில் பெண்களுக்கே நிகழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பாலியல் வன்முறைகளுக்கு கடுமையான சட்டம் கொண்டுவர வேண்டும். நாம் தினந்தோறும் பார்வையிடுகின்ற பத்திரிகைகள், சமூக ஊடகங்களில் பாலியல் வன்முறை தொடர்பான செய்திகள் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன. பாலியல் படுகொலைகள் தொடர்பில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டாலும் சிலர் தண்டிக்கப்படுவதுடன் பலர் விடுதலை ஆகின்றனர். சரியான சாட்சியங்கள் இல்லாமையும், பாதிக்கப்பட்டவர் தனக்கு ஏற்பட்ட வன்முறையை வெளிப்படையாகத் தெரிவிக்க மறுப்பதும் மறைப்பதுமே தற்போதும் வன்முறைகள் அதிகளவில் நடப்பதற்குரிய காரணங்களாகக் கொள்ளலாம்.

இன்றைய காலங்களில் வீட்டிலுள்ள உறவினர்களால் கூட பெண்களும், சிறுவர்களும் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றனர். பெண்கள் மீதான வன்முறைகளுக்கும், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் தீர்வு கூறமுடியாத நிலையில் உள்ளோம். அதிகமான ஆண்கள் போதைக்கு அடிமையாகி வருகின்றனர்.

இந்த நாளில் எத்தனை பேர் போதைக்கு அடிமையாகாமல் இருக்கிறார்கள் என்பது கேள்விக்குறியாக உள்ளது. போதையானது குற்றச்செயல்களை குற்ற உணர்வு இல்லாமல் செய்யத் தூண்டுகிறது. இது மட்டுமின்றி இணையம் முதற்கொண்டு எல்லாச் சமூக வலைத்தளங்களிலும் பாலியல் தொடர்பான காணொலிகளும் படங்களும் எல்லோருக்கும் எளிதில் கிடைக்கும் வகையில் கொட்டிக் கிடக்கின்றன. இவ்வாறான விடயங்கள் வன்முறையில் ஈடுபடத் தூண்டிவிடுவதாக அமைகின்றன.

**பெற்றோர் முன்னுள்ள பெரும் பொறுப்பு**

இவ்வாறான வன்முறைகளில் இருந்து எவ்வாறு நம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என நம் பிள்ளைகளுக்கு சிறு வயது முதல் கற்றுக்கொடுக்கவேண்டியது பெற்றோரின் தலையாய கடமையாக உள்ளது. குழந்தைகளுக்கு நல்ல தொடுகை, தீய தொடுகை குறித்து கற்றுக் கொடுக்கவேண்டும். விழிப்புணர்வாக வாழ கற்றுக்கொடுக்கவேண்டும். வீடுகளிலேயே சிறு பெண்பிள்ளைகளுக்கு எதிராக நடைபெறுகின்ற வன்முறைகள் குறைக்கப்படவேண்டும். குற்றச் செயல்களுக்கு அதிகபட்ச தண்டனைகள் வழங்கப்படவேண்டும். வீட்டில் நடக்கின்ற பாலியல் சார்ந்த வன்முறைகளை சிறு பெண் பிள்ளைகள் தயக்கமின்றி தனது பாதுகாவலர்களுக்கு, தனது பெற்றோருக்கு கூறுதல் வேண்டும். வன்முறைகள் மேற்கொள்பவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்போதே அவற்றைச் சிறிதளவேனும் குறைக்கமுடியும்.



# மனிதருள் மாணிக்கமாய்...

*'சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை*
*இகல் வெல்லல் யார்க்கும் அரிது'*

என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப சொல்வீரனாகவும், செயல்வீரனாகவும் வாழந்தவர்தான் சாவகச்சேரியை சேர்ந்த கிராம சேவகராகப் பணி புரிந்து அமரத்துவமடைந்த காசித்தம்பி பேரம்பலம். தென்மராட்சிப் பிரதேசத்தில் 1963 தொடக்கம் 1985 காலப்பகுதியில் கடமை புரிந்த இவர் நிதானமான, கண்ணியமான முறையில் கடமையாற்றி ஓய்வுபெற்று கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி தனது 92 வயதில் அமரத்துவமடைந்தார்.

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்டுள்ள அமரர் பேரம்பலம் தனது இறுதிக்காலத்தில் தமது பிள்ளைகளுடன் சென்று கனடாவில் வசித்து வந்திருந்தார். தனது கல்விக் காலத்தை நிறைவு செய்து கொண்டிருந்தபொழுது எழுதுவினைஞர் சேவைப்பரீட்சையில் சித்தியடைந்து 1953ஆம் ஆண்டு சங்கானை உதவி மாவட்ட செயலராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து பளை பணிமனைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றார். அடுத்து கொழும்பு சுகாதாரத் திணைக்களத்துக்கு இடமாற்றப்பட்டு அங்கு பணிபுரிந்து வந்தார். 1963ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை கட்டமைப்பில் கிராமத்தலைமைக்காரர் என்ற பதவி 'கிராமசேவையாளர்' என்ற பெயர் மாற்றம் பெற்றது. இக்காலத்தில் அமரரும் தமது சொந்த இடத்துக்கு வரவிரும்பி கிராமசேவையாளர் பதவிக்கு மனுச்செய்து அந்தப் பதவியில் இணைந்து கொண்டார். அந்தக் காலத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இருபத்திரண்டு கிராமசேவையாளர் பிரிவுகள் இருந்தன. இதில் அமரர் பேரம்பலம் சரசாலை, சாவகச்சேரி தெற்கு ஆகிய இரண்டு பிரிவுகளிலும் கடமையாற்றியுள்ளார். சாவகச்சேரி தெற்குப்பகுதியில் கடமையாற்றும்போது சுமார் ஆயிரத்து 200க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்தன. 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதற்கிணங்க அந்தக் குடும்பத்தினருக்கும் கிராமசேவையளார் என்ற முறையில் தன்னாலியன்ற முழு உதவிகளையும் செய்து அவர்களின் அன்பையும், பாராட்டையும் பெற்றார். அவ்வூரார் உள்ளங்களில் உத்தமராகத் திகழ்ந்தார். பொதுமக்களின் சேவையோடு தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு ஏற்ற ஆலோசனைகளை வழங்கியும் செயற்பட்டும் உதவியுள்ளார். பிறரிடம் தான் சலுகைகளை எதிர்பாராது, பக்கம் சாராது, நடுநிலையாக நின்று கடமைபுரிய வேண்டும் என்ற நோக்கில் தனது சேவைக்காலத்தில் சாவகச்சேரி பொதுச் சந்தையிலோ, அல்லது வர்த்தக நிறுவனங்களுக்கோ அவர் செல்வதில்லை. கடமை நிமித்தம் வீடுகளுக்குச் செல்லும் பொழுது கூட எதுவிதமான உபசரணைகளையும் அவர் ஏற்றுக்கொள்வதில்லை. நானும் அமரர் பேரம்பலத்துடன் ஏழுவருடங்கள் ஒன்றாக இருந்து கடமைபுரியும் வாய்ப்பைப் பெற்றேன். அந்நேரத்தில் அவர் எமக்கு வழங்கிய அறிவுரைகளை தினமும் எமது கடமைகளை செவ்வனே செய்வதற்கு உறுதுணையாக அமைந்தன. பத்து வருட எழுதுவினைஞர் சேவையுடன் இருபத்திரண்டு வருடங்கள் கிராம சேவையாளர் சேவையை இனிதே உவந்து ஏற்று, சேவையால் உயர்ந்த அமரர் 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி ஓய்வு பெற்றார். ஓய்வுக் காலத்தில் கனடாவில் வசித்துவந்த நிலையில் தனது 92ஆவது வயதில் கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி அவர் அமரத்துவம் அடைந்துள்ளார். அன்னாரின் சொற்களும், செயல்களும், ஆலோசனைகளும் சாவகச்சேரியை புதுப்பித்தன, ஒளிர்வித்தன என்றால் அதில் விவாதமில்லை.

**வை.இராசரத்தினம்**
சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 150 ஆவது அகவை நோக்கி
# இலங்கை சட்டக்கல்லூரி



கணேசமூர்த்தி உமாசுதன்
சட்டக்கல்லூரி மாணவன்
இலங்கை சட்டமாணவர் சங்கம்



'நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்பதும் 'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொரு பால்கோடாமை சான்றோர்க்கு அணி' என்பதும் பழந்தமிழ் இலக்கியங்கள் எமக்குரைத்து வைத்த நெறி முறைகள் ஆகும்.

இத்தகு நெறிமுறைகளும் வழக்காறுகளும் தான் பிற் காலத்தில் சட்டவலுவுள்ள பிரமாணங்களாக அமைந் தன. அவ்வாறெனில் இவ்விதம் தோன்றிய விதிமுறை களையும், பிரமாணங்களையும் போதிக்கவும், பயிற்று விக்கவும் ஒரு கட்டமைப்பான நிறுவனத்தின் தேவைப்பாடு வேண்டப்பட்ட ஒன்றாகும். இதன் பிரகாரம் இலங்கையைப் பொறுத்தவரையில் அதன் ஆட்புல எல்லைக்குள் சட் டமுறைமைகளை பயிற்றுவிக்கக் கூடிய உயர்தொழிற் கற்கை நிறுவனமாக உருவாக்கப்பட்டதே இலங்கை சட்டக்கல்லூரி ஆகும்.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆசிய நாடுக ளில் உருவான கல்வி, கலாசார மற்றும் தொழில்சார் மறுமலர்ச்சிச் சிந்தனையின் வெளிப்பாடாக இலங்கை அரசசட்டக்கல்லூரியின் தோற்றப்பாடும் அமைந்திருக் கின்றது. அப்போதைய காலகட்டத்தில் இலங்கையின் சட்டத்தொழில் சார்ந்த விடயங்கள் டச்சுக்காரர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. ஆயினும் இதன் பின்பு பிரித்தானியர்கள் தமது ஆட்சிக் காலத்தில் உயர்நீதிமன் றம் ஒன்றை நிறுவியதன் வாயிலாக 1801 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி நடைமுறைக்கு வந்த நீதி சாசனத்தின் பின்னர் தான் சட்டத்துறைக் கல்வியிலும், சட்டத்தொழிலிலும் இச்சட்ட நிறுவனத்தின் வகிபாகம் மேலோங்கி அமையத்தொடங்கியது. இதனடிப்படையில் 1833 ஆம் ஆண்டில் இலங்கை நீதித்துறையில் மேற் கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களின் பிரகாரம் அறிவு, திறமை, நற்பண்பு என்பவற்றை தம்மகத்தே கொண்டிருந்த நபர்களை வழக்கறிஞர்களாக நியமிக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றதுக்கு வழங்கப்பட்டது. இவ்வாறானதொரு தருணத்தில் சட்டக் கல்வியும் அதன் கற்கை முறைகளும், தொழிற்பயிற்சியூடாகவே வழங்கப்பட்டது. ஆதலினால் சட்டத்தொழிலில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள விரும்பும் எந்தவொரு நபரும் மூத்த சட்ட நிபுணர் ஒருவரின் கீழ் பயிற்சி பெற்றிருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த முறைமையினூடாக ஒரு சில குறைபாடுகள் இனங் காணப்பட்டதன் காரணத்தால் சட்டக்கல்வியை மிகவும் பயனுறுதிப்பாடுடைய ஒரு கற்கைமுறைக்குள் கொண்டு வருவதற்கான தேவைப்பாடுகள் உருவாகின.

1873 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க 'ஒருங்கிணைந்த சட்டக்கல்விப் பேரவை' ஸ்தாபிக்கப்படலாயிற்று. இதன் பின்பு சட்டக்கல்வி தொடர்பாக தனித்துவம் மிக்க ஒரு கல்வி நிறுவனமாக 1874 இல் இலங்கை சட்டக்கல்லூரி நிறுவப்பட்டது. இதுவே வழக்கறிஞர் தொழிலுக்கான தகு தியை உருவாக்கிக்கொடுக்கின்ற கற்கை நிறுவனமாக அமைந்தது. சட்டக்கல்லூரி நிறுவப்பட்ட காலத்தில் பிரதம நீதியரசராக இருந்த எட்வார்ட் செப்பேர்ட் கிரேசி சட்டத்து றையில் நுழைவதற்கு மிகவும் பொருத் தமான நபர்களைத் தேர்வு செய்வதற்கு தேவையான பின்னணியை உருவாக் கினார். இன்றுவரை ஒருங்கிணைந்த சட்டக்கல்விப் பேரவையின் தலைமை பதவி பிரதமநீதியரசரையே சாரும்.

இதனைத் தொடர்ந்து 1889 ஆம் ஆண் டின் 1ஆம் இலக்க நீதிமன்ற கட்டளைச் சட்டதின் பிரகாரம் சட்டக்கல்வி தொடர் பாக மேலும் பல புதிய மாற்றங்கள் சேர்.பொன்னம்பலம் இராமநாதனால் கொண்டுவரப்பட்டதோடு அவரது தலைமையின் கீழ் 1894 இல் இலங்கை சட்டமாணவர் சங்கம் உருவாக்கப்பட் டது. 1900 களின் ஆரம்பப்பகுதியில் இந்தச் சங்கத்தின் தலைமைப்பதவி மூத்த வழக்கறிஞர்களுக்கு வழங்கப் பட்டிருந்தாலும் தற்போது ஒரு தேர்தல் முறைமை மூலம் இலங்கை சட்டமாணவர் சங்கத்தின் 15 பதவிகளுக்கு சட்டக்கல்லூரி மாணவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றார் கள். அவ்வகையில் இன்று 150 ஆவது அகவையில் இலங்கை சட்டமாணவர் சங்கத்தின் தலைவராக நவொட் ரத்னசேகர திகழ்கின்றார்.

இலங்கை சட்டக்கல்லூரியின் பிரதான கட்டடம் புகழ்பெற்ற பிரித்தானிய கட்டடக்கலை நிபுணர் எட்வார்ட் ஸ்கின்னர் ஆல் வடிவமைக்கப்பட்டது. இதன் கட்டுமானம் 1911 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்டடத்துக்கான அடிக் கல்லை அப்போதைய பிரதம நீதியரசர் சேர் ஜோசப் கட்ச்சின்சன் மற்றும் பல முன்னணி வழக்கறிஞர்கள் நாட்டினர். சேர்.டி.ஈ.டி.சம்பயோ அதன் உருவாக்கத்துக் காக தீவிரமாக உழைத்தவர் ஆவார். பெண்களுக்கு 1934 ஆம் ஆண்டில் சட்டக்கல்லூரியில் இணைந்து கற்பதற்கான வாய்ப்பை வழங்கியமையானது ஒரு வர லாற்றுப் பதிவாக அடையாளப்படுத்தப்படுகின்றது. 1936 ஆம் ஆண்டில் இலங்கை சட்டக்கல்வி பற்றிய அறிக்கை ஒன்று உருவாக்கப்பட்டு அப்போதைய பதிவாளர் சீ.சீ.ஏ. பிரிட்டோ முத்துநாயகத்தினால் கல்லூரிக்கு நிரந்தர நிர் வாக அதிகாரி ஒருவர் வேண்டுமென்ற கோரிக்கையும் முன்மொழியப்பட்டது. கல்லூரி முதல்வர் என்றழைக் கப்படும் இந்தப் பணிநிலையிலுள்ளவர் திறன்மிகுந்த ஆலோசகராகவும், சட்டமாணவர்களின் வழிகாட்டியா கவும் செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த முன்மொழிவுகளுக்கு அமைவாக சீ.சீ.ஏ. பிரிட்டோ முத்துநாயகம் சட்டக்கல்லூரியின் முதலாவது அதிபராக நியமிக்கப்பட்டதோடு இரண்டு தசாப்தங்களாக இந்தப்ப தவியில் தனது கடமைகளை ஆற்றி கல்லூரியின் முன் னேற்றத்திற்கு பெரிதும் பங்காற்றியிருந்தார்.

தற்போது இலங்கை சட்டக்கல்லூரியின் அதிபராகக் கட மையாற்றும் கலாநிதி அதுல பதிநாயகேவின் வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவத்தின் கீழ் சட்டக்கல்லூரியானது நீண்ட நாள் கோரிக்கைகளுடன் கூடிய பல்துறைசார் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் வளர்ச் சியடைந்து செல்வதாக அமைகின்றது.

சட்டக்கல்லூரி விடுதி இவ்வாண்டு தனது 75 ஆவது அகவையினைப் பூர்த்தி செய்வது குறிப்பிடத்தக்கது. Administration of Justice Law No. 44 of 1973 இன் படி Advocates மற்றும் Proctors என்ற இரு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு Attorneys at Law என்ற பிரிவு உருவாக்கப்பட்டது.

சட்டக்கல்லூரிக்கான மாணவர்களை உள்ளீர்ப்பது தொடர்பான தற்போதைய தேவைப்பாடுகளின் படி பொது நுழைவுத்தேர்வில் தேர்ச்சிபெற்று அனுமதி பெறும் மாணவர்களைத் தவிர உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சட்டமானிப்பட்டத்தைப் பெறும் அனைத்து மாணவர்களும் சட்டக்கல்லூரியில் பரீட்சை களை எதிர்கொள்ள வேண்டியவராகின்றனர். இவ்வகை யில் இலங்கையில் சட்டத்தொழிலுக்குள் நுழைய எத்த னிக்கும் யாவரும் சட்டக்கல்லூரி மூலமாகவே வெளியேற வேண்டியவர்களாகின்றனர். ஆதலினால் சட்டத்துறையி லுள்ள அனைத்து தொழில் வல்லுநர்களும் இலங்கை சட்டக்கல்லூரியின் பழைய மாணவர்களே.

இலங்கையின் முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மறைந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை அரசியல் வரலாற்றில் மதிப்புக்குரிய பிரமுகர்களாகத் திகழ்ந்த சேர் லலித்தா ராஜபக்ச, சேர் சிறில் டீ சொய்சா, கலாநிதி சீ.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா, காமினி திஸநாயக்கா, லலித் அத் துலத்முதலி, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், ஆர். சம்பந்தன் ஆகி யோரும் சட்டக்கல்லூரியின் பழைய மாணவர்கள் என்பது பெருமைக்குரிய விடயமாகும். இவர்களோடு இலங்கை யின் அனைத்து பிரதமநீதியரசர்களும் அனைத்து சட்டமா அதிபர்களும் எல்லாச் சட்டவல்லுநர்களும் இலங்கை சட்டக்கல்லூரியில் கற்றவர்களாவார்கள். சட்டக்கல்லூரி யின் உள்ளார்ந்த விடயங்களும் அதன் வகிபாகங்களும் இலங்கை சட்டத்துறை வரலாற்றில் முக்கியமான கருது பொருளாக அமைந்திருக்கின்றது. கடந்த 150 வருடங்க ளாக மகத்துவமான பதிவுகளை தனது அடையாளங்களாக சட்டக்கல்லூரி கொண்டுள்ளது. இது தொடர்ந்தும் இலங்கையின் முன்னேற்றத்துக்கு தன்னா லான புனிதமான பங்களிப்புகளை நல்கி எதிர்காலத்தில் தலைசிறந்த சட்டவல்லுநர்களின் உருவாக்கத்துக்கு வழி செய்யுமென்பது திண்ணம்.

**தரவுகள்:**
*மனித் பத்திரனவின் சட்டக்கல்லூரியின்
150 ஆவது ஆண்டு நிறைவு
நினைவுத் தபால் முத்திரை வெளியீடு
தொடர்பான சிங்கள மொழிக் கட்டுரை*

# காரைநகர் - யாழ்ப்பாணம் சேவை தொடரட்டும்

வாசகர் கடிதம்

காரைநகர் - யாழ்ப்பாணம் மேற்படி இ.போ.ச.சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதும் சமூகத் துக்குப் பயனுள்ளதுமானதொன்று.

வட்டு. இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி மற்றும் கல்விக் கூடங்களின் மாணவர்கள் கூடுத லாகப் பயனடைவார்கள். மேலும் டச்சுவீதியை அண்மித்து வசிக்கும் தொல்புரம், பத்தானை, கற்பகச்சோலை, கலைந கர், செட்டியார்மடம், அராலிப்பகுதி மக்களுக்கும் இச்சேவை வரப்பிரசாதமாகும். யாழ். போதனா மருத்துவமனை, அத்தி யாவசியத் தேவைகளுக்காக நகருக்கு சென்றுவருபவர்களும் பயனடைவர். நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் ஆ.தியாகராஜா பெருமகனாரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த வழித்தடசேவை பல்வேறு காரணங்களைச் சொல்லி நிறுத்தப்படுவது மனவருத்தத்துக்குரியதாகும். சலிப்படையாது இச்சேவையை தொடர்வார்களானால் பயணிப்போர் தொகை அதிகரிக்கும் வாய்ப்பு நிச்சயமானதாகும். இச்சேவையை மீண் டும் ஆரம்பிக்க காரணமான நல்ல உள்ளங்களும், காரைநகர் சாலையினரும் இச்சேவையை தடங்கலின்றி நடத்துவதற்கு உதவுமாறு இந்த வழித்தடமூடாகப் பயணிப்போர் சார்பில் தய வாக்கும், தாழ்மையாகவும் வேண்டுகின்றேன்.

செல்வவேலாயுதம்
*கேணி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவர் ஜெயகுலராஜா

## முல்லை மருத்துவத்துறையின் ஒப்பற்ற பணியாளன்



■ கு.சிவபாலராஜா

முல்லைத்தீவு மாவட்டத்தின் மருத்துவத் துறைக்கும், சமூகத்துக்கும் ஒப்பற்ற பணிசெய்த பண்பாளன்தான் மருத்துவர் அமரர் டானியல் ஜேசன் ஜெயகுலராஜா என்றால் அதை மறுப்பதற்கில்லை.


அம்பாறை மாவட்டம் திருக்கோயிலைச் சேர்ந்த எட்வேட் வில்லியம் வேலுப்பிள்ளை துரைராஜாவுக்கும். கணுக்கேணி தண்ணீரூற்றைச் சேர்ந்த றோஸ் மனோன்மணிக்கும் மகனாகப் பிறந்தவர் டானியல் ஜேசன் ஜெயகுலராஜா.

எல்லா மக்களும் ஒரு மதமே என்ற பரம சமயக் கோட்பாடு அவரிடம் காணப்பட்டது. முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரியாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் திறம்படச் சேவையாற்றிய பெருமகன் அவர். முல்லைத்தீவு மாவட்டத்தில் மகப்பேற்று தாய்மார் பொறுப்பதிகாரி ஆகிய பதவிகளையும் வகித்தவர். 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சுனாமிப் பேரலையால் முல்லைத்தீவு மாவட்டம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. கடற்கரையோரத்தில் அமைந்திருந்த சுகாதாரப் பணிமனை பாதிக்கப்பட்டது. அந்த இன்னல்களுக்கு மத்தியிலும் விழிப்போடு இரவு பகல் கருதாமல் மருத்துவர் ஜேசன் ஜெயகுலராஜா பொதுமக்கள் நலன் கருதி தனது உயிரையும் பொருட்படுத்தாது செயலாற்றியமை என்றும் மறக்கமுடியாது.

முல்லைத்தீவு மாவட்டம் சுமார் 2 ஆயிரம் சதுர மைல் பரப்பினைக் கொண்ட பெரிய நிர்வாக மாவட்டம் ஆகும். இந்த மாவட்டத்தில் போக்குவரத்து வசதிகள் மற்றும் எரிபொருள் வாகன இறக்குமதி முதலியன தடைப்பட்டிருந்த காலத்தில், நிலைமைகளைத் தனது சாதுரியத்தாலும் பொறுமையாலும், அன்பாலும் அனைவரையும் அரவணைத்து அவர் செயலாற்றிய விதம் பாராட்டத்தக்கது. எதிலும் வெற்றி காண்பார், தோல்வியடையமாட்டார்.

சிறந்த ஆங்கிலமொழி அறிவாளர். அதனால் மாவட்டத்தில் பலருக்கு உதவி செய்துள்ளார். ஊரவர்களுக்கு அவர் ஒரு மருத்துவர் மட்டுமல்ல, பெருந்தலைவரும் வழிகாட்டியுமாவார். பலருக்கு ஆங்கிலப்பாட போதனைகளை தனது நேரத்தையும் பொருட்படுத்தாது வழங்கினார். அவர் இன்று இல்லையென்றாலும், அவர் ஆற்றிச் சென்ற பணிகள் காலத்தால் அழியாதவை.



எழுத்தாளர் தேன்மொழி சபா எழுதிய மூன்று சிறுவர் நூல்களின் அறிமுக நிகழ்வு காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்றது. (ம)













கலாநிதி வன்னியூர் செந்தூரன் எழுதிய கவிதைத் தொகுப்பு வெளியீடு கிளிநொச்சியில், அடங்காப்பற்று தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது. (ம)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
15
05
1956



மறைவு
05
08
2024

## செல்லத்துரை புஸ்பவதி

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் நுணாவில் மத்திசாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை புஸ்பவதி அவர்கள் கடந்த 05.08.2024 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் பூமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - செல்லத்துரை தம்பதியரின் அன்பு மனைவியும், சுவாமிநாதன்- சின்னம்மா தம்பதியரின் மருமகளும் சந்தோஷ் (ஜேர்மனி), சந்திரிகா (போதனாசிரியர் இசைத்துறை யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுனிதா, சுஜித்குமார் (Eco Test Laugfs) ஆகியோரின் மாமியாரும் சஞ்ஜித், தஸ்வனா, திவ்யன், யோகித் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற கமலாம்பிகை காலஞ்சென்ற ஜெயராசா, ஞானேஸ்வரி (நிலாவரை), விஜயராசா(பரந்தன்), கணேஸ்வரி (வவுனியா), பாலேஸ்வரி (ஜேர்மனி), கருணாவதி (ஜேர்மனி), குகராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2024) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் (காந்தாளம்பிட்டி கொல்லங்கராய்) இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நுணாவில் மத்தி
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
077 137 2786

(CS 1090) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
19
04
1933



மறைவு
02
08
2024

## இன்பநாதன் கிறிஸ்தீன்னம்மா (தங்கரத்தினம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இன்பநாதன் கிறிஸ்தீன்னம்மா (தங்கரத்தினம்) அவர்கள் 02.08.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை-இராசமணி தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான அந்திரேஸ்-மங்களம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அந்திரேஸ் இன்பநாதன் அவர்களின் அன்பு மனைவியும் எவெரெஸ்ட் செல்வராஜா (பிரித்தானியா), திரேசா வையிலற் (வேவி-இலங்கை), றெஜினோல்ட் ஜெயராஜா (பிரான்ஸ்), மரிய இசிடோறா (பவா-பிரித்தானியா), டக்ளஸ் ஆனந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தி (பிரித்தானியா), காலஞ்சென்ற அல்பிரட் யோகராஜா, யசி (பிரான்ஸ்), சூரியகுமார்(பிரித்தானியா), விஜி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஜீவரத்தினம், டொன்பொஸ்கோ, யோசப் சேவியர் மற்றும் மேரிறோசலின் (மலர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பற்றிக்-சரண்யா (பிரித்தானியா), ஸ்ரிவன்-ரமீஸ்கா (பிரித்தானியா), பற்றீசியா-கீரன் (பிரித்தானியா), தர்ஷினி (சுமி)-சுரேஸ் (பிரித்தானியா), தர்மினி (பமிலா)-அன்ரன் விமல்ராஜ் (பிரித்தானியா), நிஷாந்தினி (ஆசிரியை கார்மேல் பாலர் பாடசாலை)-யோய் ஜயந்தன் (பனை அபிவிருத்திச் சபை, இலங்கை), சுதர்ஷன் (பிரான்ஸ்), யாழினி-தயாபரன் (பிரித்தானியா), நிஷாந்தியா-தரோன் (பிரான்ஸ்), அன்றியா (பிரான்ஸ்), கிளொடியா- சுதாகரன் (பிரித்தானியா), கிறி (பிரித்தானியா), யூலியா-றொகான் (பிரித்தானியா), அலெக்ஸ் (ஜேர்மனி), ஹறி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், எய்டன் (பிரித்தானியா), கியானா (பிரித்தானியா), லக்ஷ்மி (பிரித்தானியா), நிஷான் (பிரித்தானியா), ஏரோன் (பிரித்தானியா), அஸ்ரன் (பிரித்தானியா), டெறிக் (இலங்கை), நிலோன் (இலங்கை), தஷ்வின் (பிரித்தானியா), தஷ்வியா (பிரித்தானியா), தர்வின் (பிரித்தானியா), லேனா (பிரான்ஸ்), மிலா(பிரான்ஸ்), சாய்லன் (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08-08-2024) வியாழக்கிழமை பி.ப 03:00 மணியளவில் புனித திருமுழுக்கு ஜோவான் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இல 2, இராசாவின்
தோட்ட ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 772 1334

(CS 1086) V-1

# மரண அறிவித்தல்



மலர்வு
24.05.1964

உதிர்வு
03.08.2024

## உமாகாந்தன் வனஜா
### (வனஜா)

(செயலாளர் - ஏழாலை மேற்கு,
ஸ்ரீ விநாயகர் ஐக்கிய நாணய சங்கம்)

ஏழாலை மேற்கினை பிறப்பிடமாகவும் "குமரகிரி" ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உமாகாந்தன் வனஜா கடந்த (03.08.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் - வேதநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நாகேந்திரம் உமாகாந்தன் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி வி. நந்திதா, திருமதி உ.வர்ஜிதா, காலஞ்சென்ற உ.ராம்சரன் மற்றும் செல்வி உ. மானஷிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், ம. விஜயாலயன், ச. உமாகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், செல்வன் வி. ஜமிகன் வேத், செல்வன் உ. இயலிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பா.பாலமுரளிதரன் (பிரான்ஸ்), பா. பாலசுரேஷ் (சுவிஸ்), பா. பானுகோபன் (லண்டன்), பா. பாலதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.08.2024) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகிரி,
ஏழாலை தெற்கு,
[illegible]

தகவல்:
குடும்பத்தினர்.
077 349 2554

(cs.55879) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிகள் கப்பல் மீண்டும் ஆரம்பம்

தமிழகத்தின் நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பற்சேவை அடுத்தவாரம் முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

40 ஆண்டுகளுக்குப் பின்னர் நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பித்து வைத்திருந்தார். கப்பற்சேவை தினசரி இயக்கப்படுமென அறிவிக்கப்பட்ட நிலையில் பயணிகள் ஆர்வம் காட்டாமையால் அது வாரத்திற்கு மூன்று நாட்கள் எனக் குறைக்கப்பட்டது. அதற்கும் போதிய பயணிகள் இல்லாமையால் சில நாட்களிலேயே கப்பல் சேவை நிறுத்தப்பட்டது. ஏழு மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையேயான பயணிகள் கப்பல் சேவை இந்த வருடம் மே மாதம் 13ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், தவிர்க்கமுடியாத கடற்போக்குவரத்து விதிமுறைகளாலும், காலநிலை மாற்றங்களாலும் குறித்த பயணிகள் கப்பல் சேவை தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் நிறுத்தப் பட்டது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, தமிழகத்தின் நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பற்சேவை அடுத்தவாரம் முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (ம- 66)

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாண நகரில் உள்ள பிரபல்யமான புத்தகசாலைக்கு விற்பனை உதவியாளர் தேவை.
உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.
**077 663 9304**
(Cs/58869) N-1

## 65 இலட்சம்...

பணத்தை இழந்தவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆலோசனைக் கட்டணங்கள் தவிர வேறு எந்தக் கட்டணமும் இன்றி வெளிநாட்டுக்கு அனுப்பப்படும் என்று சமூக வலைத்தளத்தில் விளம்பரத்தைப் பார்த்து யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த ஒருவர் அதில் குறிப்பிடப்பட்டிருந்த உள்நாட்டு மற்றும் பிரிட்டன் தொலைபேசி எண்களுக்குத் தொடர்பு கொண்டுள்ளார். அந்தத் தொலைபேசி இலக்கங்களில் பேசியவர்கள், வங்கிக் கணக்கில் ஒரு தொகைப் பணத்தை வைப்பிட்டுக் காட்டவேண்டும் என்றும், சில ஆவணங்களைத் தங்களுக்கு அனுப்ப வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

தொலைபேசியில் பேசியவர்களின் கதையை நம்பி, தனது கடவுச்சீட்டுப் பிரதிகள், அடையாள அட்டைப் பிரதிகள் உட்பட பல ஆவணங்களை குறிப்பிடப்பட்ட கொழும்பு விலாசம் ஒன்றுக்கு அனுப்பியுள்ளார். அவர்கள் குறிப்பிட்ட தொகையை தனது வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு, வங்கிச் செயலியில் கணக்குமீதியை ஸ்கீரின் சொட் எடுத்தும் அனுப்பியுள்ளார். இந்தநிலையில் கடந்த 27ஆம் திகதி குருநகரைச் சேர்ந்தவரது கைபேசி இலக்கம் செயலிழந்துள்ளது. சிலநாள்களின் பின்னர் வங்கிக்குச் சென்று தனது கணக்கு மீதியைச் சரிபார்த்தபோது, அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வங்கிக் கணக்கில் இருந்த 65 இலட்சம் ரூபாவும் காணாமல் போயிருந்த நிலையில், யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் அது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான பொலிஸ் குழு இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்தது. விசாரணைகளின் அடிப்படையில் பெண் ஒருவர் உட்பட இருவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன. குருநகரைச் சேர்ந்த நபரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்களைக் கொண்டும், அவரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டும் நூதனமான முறையில் வங்கிக் கணக்கில் இருந்த பணம் வேறொரு வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. குருநகரைச் சேர்ந்தவரின் கைபேசி இலக்கத்தைச் செயலிழக்கச் செய்து, அவரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்களைக் கொண்டு ஈ-சிம் ஒன்று சந்தேகநபர்களால் பெறப்பட்டுள்ளது. தற்போது கைது செய்யப்பட்ட பெண்ணே கைபேசி நிறுவனத்துக்குச் சென்று உரையாடி, அந்த இலக்கத்துக்குரியவர் தற்போது தாய்லாந்தில் உள்ளார் என்று தெரிவித்து, தாய்லாந்து தொலைபேசி இலக்கத்தில் ஒருவரை உரையாட வைத்து ஈ - சிம்மைப் பெற்றுள்ளார். அதனால் பணப்பரிமாற்றம் தொடர்பான குறுந்தகவல்கள் உரியவருக்குக் கிடைப்பது தடுக்கப்பட்டுள்ளது.

தாம் சேகரித்த ஆவணங்கள், தகவல்கள் என்பவற்றைக் கொண்டு, குருநகரைச் சேர்ந்தவரின் வங்கிக் கணக்குக்குள் செயலி ஊடாக நுழைந்த சந்தேகநபர்கள், அதிலிருந்த பணத்தைத் திருடியுள்ளனர். தற்போது கைது செய்யப்பட்ட பெண்ணின் வங்கிக் கணக்குக்கே முதலில் பணம் மாற்றப்பட்டுள்ளது. அதன்பின்னர் மற்றொருவரின் வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது. அந்த நபர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் ஐ.டி. துறையில் பணியாற்றுபவர் என்று கூறப்படுகின்றது. கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-26)

## விலைமனுக் கோரல்

SDB வங்கிக்கு சொந்தமான பெறுமதி வாய்ந்த பின்வரும் சொத்துகள் விற்பனைக்கு உள்ளன.

01. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் பொத்துவில் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஊறணி கனகர் கிராமத்தில் காணி விற்பனைக்கு உண்டு.

| அளவு | |
|---|---|
| காணி | 1 ரூட் 15.29 பேர்ச்சஸ் |

02. வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் புத்தூர் மேற்கு(J/273) கிராம அலுவலகர் பிரிவுக்கு உட்பட்ட சிறுப்பிட்டி கிராமத்தில் காணி விற்பனைக்கு உண்டு.

| அளவு | |
|---|---|
| காணி | 34.32 பேர்ச்சஸ் |

**பரிசோதனை செய்தல்**

விலைமனு அடங்கிய விண்ணப்பம் அல்லது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை SDB வங்கியைச் சாரும். உங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனு விண்ணப்பங்களை 2024/08/07 முதல் 2027/08/21 வரை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு நேரடியாக வந்து ஒப்படைக்கவோ அல்லது பதிவுத் தபாலின் ஊடாக அனுப்பிவைக்கவோ முடியும்.

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்**

நாலக்க SDB (வங்கி தலைமைக்கியாலயம்) 074 3885640

SDB வங்கி

தலைமையகம் - கடன் மீட்டல் சேகரிப்பு,
SDB வங்கி,
இல. 12, எட்மன்டன் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
தொலைபேசி : 011 2515100 / 011 2515102

# INVITATION FOR BIDS (IFB)
# TEACHING HOSPITAL, JAFFNA

| S.No | Item Code | Non-Refundable tender fee (Rs.) | Supply, Installation, Maintenance & Commissioning of | Bid Security |
|---|---|---|---|---|
| 1. | JTH/SA/P09/ GAR.BAG /2024 | 1000.00 | Supply of Garbage Bags & Shoes | 100,000.00 |
| 2. | JTH/SA/P10/STATIONARY/2024 | 1000.00 | Supply of Stationary Items | 100,000.00 |
| 3. | JTH/SA/P11/ WATER SUPPLY/2024 | 1000.00 | Supply of Water Supply Items | 50,000.00 |
| 4. | JTH/SA/P12/ TONER/2024 | 1000.00 | Supply of Toners | 50,000.00 |
| 5. | JTH/SA/P13/ELECTRICAL/2024 | 1000.00 | Supply of Electrical Items | 100,000.00 |
| 6. | JTH/SA/P14/TYRE&TUBE/2024 | 1000.00 | Supply of Tyre & Tube Items | 50,000.00 |

1. Sealed bids for the supply of the under mentioned Category will be received by Chairman Regional Procurement Commnittee. Teaching Hospital. Jaffia.
2. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) method
3. Only the sole nominated representative / accredited agent of manufactures Offercd for the Sri Lanka market are eligible to participate in this bid.
4. Sealed bids should be made on a complete set of bidding documents for the project in original shall be sent by, the Registered Post or shall be deposited in the tender box addressed to the Chairman. Regional Procurement Committee, and Teaching Hospital Jaffna on or before **10.00 am on 21" of August,2024.**
5. Bid documents should be obtained from Accountant, at the above address from **07.08.2024 to 20.08.2024**
   a) A written application to the Chairman, Regional Procurement Committee Teaching Hospital Jaffna.
   b) Certificate of Business Registration (Certified Photocopy)
   c) Upon payment of the non-refundable tender fee stated above in cash to the Directot Teaching Hospital, Jaffna.
6. All bids must be accompanied by a Bid-Security amounting to LKR mentioned in the bid projects table/ document for each projects by cash or bank bond and the validity period until **17.12.2024 (119 days)** from deadline of the bid.
7. Bids will be opened immediately after the closing of bids at the office of the Chairman / Director, bidders or their representatives permitted to be present when bids are opened.
8. Bid Documents may be inspected free of charge at the Procurement Division in Our Hospital.
9. Further information could be obtained from Director/Accountant TH /Jaffna (Tel -021 222 3149 / 021 221 2482)

**Director / Chairman.**
**RPC / Teaching Hospital, Jaffna.**
**05.08.2024**

(cr.39563) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயகத்தில்...

நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் பிரதிநிதிகள் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்களுக்கும், இன அழிப்புக்கும் சர்வதேசமே எமக்கான நீதியைப் பெற்றுத் தரவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகின்றோம். 2 ஆயிரத்து 700 நாள்களுக்கும் மேலாக தெருவில் நின்று எம் பிள்ளைகளின் விடுதலைக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றோம். எங்களின் குரல்களை அரச அடக்கு முறைகளால் ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது. சர்வதேச நீதி கிடைக்கும் வரையில் எங்களுடைய போராட்டம் தொடரும். ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. அன்றைய நாளில் வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நீதிக்கும் விடுதலைக்குமான போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

உலகமெங்கும் காணாமல் ஆக்கப்படுதல் என்பது ஓர் ஆயுதமாகவே கையாளப்படுவதாக ஐக்கியநாடுகள் சபை கூறுகின்றது. அதாவது ஜனநாயகத்திற்கு எதிரான, மனித உரிமைகளுக்கு எதிரான, இனங்களுக்கு எதிரான ஓர் ஆயுதமாக காணாமலாக்கப்படுதல் பிரயோகிக்கப்படுகின்றது. ஈழத்தைப் பொறுத்தவரையில் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது முள்ளிவாய்க்காலிலோ, அதற்கு முந்தைய சில ஆண்டுகளிலோ தொடங்கிய நிகழ்வல்ல. ஈழத்தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோரி போராடத் துவங்கிய காலத்திலிருந்தே வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது இன ஒடுக்குமுறையின் ஒரு ஆயுதமாகக் கையாளப்பட்டு வந்துள்ளது.

அதாவது முள்ளிவாய்க்காலுக்கு முந்தைய காலத்தில் கூட தமிழ் இளைஞர்களை அடக்கி ஒடுக்கவும் ஆயுதப் போராட்டத்தின் மீது அச்சத்தை ஏற்படுத்தவும் இளைஞர் சக்தியை இல்லாமல் செய்யவும் ஈழத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது கட்டமைக்கப்பட்ட ரீதியில் சிறீலங்கா அரசின் இயந்திர நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகவே முள்ளிவாய்க்கால் இனவழிப்புப் போரின் போது சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சுமார் ஒரு இலட்சம் பேரளவில் இறுதிப்போரில் இனவழிப்புச் செய்யப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றது. சுமார் ஐம்பதாயிரம் பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 21 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் இராணுவத்தின் கரங்களில் கையளிக்கப்பட்டும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் போதும், இறுதியாக முள்ளிவாய்க்காலிலும், அதன் பின்பும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? என்பதையே இன்று ஈழத்தமிழ் மக்கள் கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சரணடைந்தவர்கள் இறந்துவிட்டார்கள் என்றும், சரணடைந்தவர்கள் இப்போது இல்லை எனவும் மழுப்பல் பதில் கூறுகின்ற சிறீலங்கா அரசாங்கம் அவர்களை என்ன செய்தது என்பதை இந்த உலகத்திற்கு அறிவிக்கவேண்டும்? அவர்கள் எப்படி வலிந்து இல்லாமல் செய்யப்பட்டார்கள் என்றும், இவர்களுக்கு என்ன நடந்தது? என்பதையும் சிங்கள அரசு வெளிப்படுத்த வேண்டும். இவற்றை வலியுறுத்தியே எதிர்வரும் 30ஆம் திகதி நாம் வடக்கு - கிழக்கில் பெரும் போராட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம். இவற்றுக்கு பொதுமக்கள் தங்களின் பூரண ஒத்துழைப்பை வழங்கி எங்களின் குரல்களைப் பலப்படுத்த வேண்டும்" - என்றனர். (அ-ம-20-125)

## மாகாணசபை...

வதற்கு வழிவகுக்கும் வகையிலான மாகாணசபை தேர்தல்கள் திருத்தச்சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாம் வாசிப்புக்காக முன்வைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போதே இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனால் மேற்படி சட்டவரைவு சபையில் முன்வைக்கப்பட்டது. இதனை அடுத்து சட்டவரைவு அரசமைப்பு நடவடிக்கை தொடர்பான குழுவுக்கு அனுப்பப்படவுள்ளது என்று சபாநாயகர் அறிவித்தார். (அ-ம-44)

## 2040 ஆம்...

ஆளுகை மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பமானது. மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய உலகில் புவிசார் அரசியல் நிலைமை எதிர்த்திசையில் நகர்கிறது என்பதை நாம் அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும். நிலையான வளர்ச்சி இலக்குகள், பரிஸ் காலநிலை மாநாடு மற்றும் கிளாஸ்கோ மாநாடு ஆகியவை பாதியில் தடைப்பட்டுள்ளன.

உலகின் இரண்டு முக்கியமான பொருளாதாரங்கள் மீது நாம் கவனம் செலுத்த வேண்டும். ஐரோப்பா முன்னோக்கி நகர்ந்தாலும் அதில் சிக்கல்களும் உள்ளன. இந்தச் சூழலில்தான் நிலையான வளர்ச்சி இலக்குகள் மீது நாம் கவனம் செலுத்துகிறோம்.

காலநிலை மாற்றம் இன்று பெரும் சவாலாக உள்ளது. அமெரிக்க அதிபராக ட்ரம்ப் தெரிவுசெய்யப்பட்டால், இந்த விடயம் இன்னும் சிக்கல் மிக்கதாகும் என்பது வெளிப்படையே. போர்களுக்காக ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும், ரஷ்யாவும், மத்திய கிழக்கு நாடுகளும் செலவிடும் தொகையைப் பாருங்கள். இவற்றை காலநிலை மாற்றத்துக்காகப் பயன்படுத்தியிருக்கலாம். பழிவாங்கும் தாக்குதல்கள் இலங்கை உட்பட அனைத்து நாடுகளுக்கும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். இவ்வுலகில் நிலைமைகள் சரியில்லை என்பதை இந்நிகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன - என்றார். (அ-ம)

## அநுரகுமாரவிடம்...

நிறைவேற்றுப் பேரவை உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் வைப்புச் செய்யப்பட்ட வேளை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாட்டைப் பொருளாதார ரீதியாக சீரழித்து, ஊழல்மிக்க, கீழ்த்தரமான, அசிங்கமான அரசியலை முன்னெடுத்து வந்த யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறோம் - என்றார். (அ-ஒ-இ)

## ஆசிரியர்...

வராவார். வவுனியா நெளுக்குளம், பாலாமைக்கல் பகுதியில் அமைந்துள்ள தோட்டக்காணிக் கிணறொன்றிலிருந்தே மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலம் மீட்கப்பட்ட கிணற்றுக்கு அருகில் ஆசிரியரின் சைக்கிள், பாதணி, குடை என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. நெளுக்குளம் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-110-19-66)

## கூட்டமைப்பின்...

நாடாளுமன்றத்தில் நேற்று மாகாணசபைத் தேர்தல் திருத்தச்சட்ட வரைவை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்தார். அதன்பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே விமல் வீரவன்ஸ இவ்வாறு கேள்வி எழுப்பினார். இது தொடர்பில் விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

"நல்லாட்சிக் காலத்தின்போதே மாகாணசபைத் தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது. தற்போது ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது, விரைவில் தேர்தல் நடத்தப்படவுள்ளது. எனவே, இவ்வாறானதொரு குறுகிய காலப்பகுதிக்குள் மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு கொண்டுவரப்படுவதன் நோக்கம் என்ன? மாகாண முதல்வர் விரும்பக்கூடிய ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டால் பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் உள்ளிட்ட கட்டளைச் சட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை ஜனாதிபதி பெறுவதற்காகவே இந்தத் திருத்தச்சட்ட வரைவு கொண்டுவரப்படுகின்றது. இது தேர்தல் குண்டாகக்கூட இருக்கலாம். எனவே, தேர்தல் நோக்கங்களுக்காக திருத்தச் சட்டங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு சபாநாயகர் இடமளிக்கக்கூடாது" - என்றார். (அ-ம-44)

## காங்கேசன்...

ஆரம்பத்தில், காங்கேசன்துறை துறைமுகத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்திய அரசாங்கம் கடன் வழங்க எண்ணியது. எனினும், தற்போதைய பொருளாதார நிலை காரணமாக இலங்கையில் திட்டங்களை முன்னெடுப்பதில் இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றியுள்ளது. ஆயினும், இந்தியாவின் மானிய உதவியின் கீழ் குறித்த துறைமுக அபிவிருத்திக்கான முன்மொழிவுக்கு இலங்கை அண்மையில் அனுமதி வழங்கியது.

ஆரம்பகால முன்மொழிவுகளின்படி இந்தியக் கட்டமைப்பாளர் ஒருவர் குறித்த திட்டத்தை நிறைவேற்றுவார் என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சின் செயலர் கே.டி. எஸ்.ருவன்சந்திரா தெரிவித்துள்ளார்.

"இந்தியா 30 ஆண்டுகள் குத்தகையில் அதன் வணிகச் செயற்பாடுகளை காங்கேசன்றை துறைமுகத்தில் முன்னெடுக்க முயன்றது. எனினும், குறித்த விடயம் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை" என்றும் கே.டி. எஸ்.ருவன்சந்திரா மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஒ-6)

## வேலையற்ற...

நாடாளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாக வேலையற்ற பட்டதாரிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது. ஆனால் நாட்டில் 50ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் இருக்கின்றனர். அவர்களுக்கு அரச துறையில் மற்றும் அரசாங்கம் அல்லாத தனியார் துறையில் தொழில் பெற்றுக்கொடுக்கும் முறையான வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளுமாறு நாங்கள் அரசாங்கத்துக்கு ஆரம்பத்தில் இருந்து தெரிவித்து வந்தோம்.

ஆனால், 50ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைக்குத் தீர்வு என்ன?, அதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டம் என்ன? என்ற எமது கேள்விக்கு அரசாங்கத்திடமிருந்து எங்களுக்கு முறையான பதில் கிடைக்கவில்லை. அவர்களுக்குப் பயிற்சி நடவடிக்கை ஆரம்பித்துள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றபோதும், அரசாங்கம் கூறுவதுபோல் எந்தவித பயிற்சி நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவில்லை என்பதைப் பொறுப்புடன் தெரிவிக்கிறேன். வேலையற்ற பட்டதாரிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கை ஒருசில வாரங்களுக்கு முன்னர்தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் ஏன் இந்தளவு காலம் இதனை செய்யாமல் இருந்தது. செப்ரெம்பர் 21ஆம் திகதியை இலக்கு வைத்தா தற்போது வேலையற்ற பட்டதாரிகளைப் பதிவு செய்ய ஆரம்பித்திருக்கிறீர்கள்? வேலையில்லாமல் 50ஆயிரம் பட்டதாரிகள் வீதியில் இருக்கின்றனர்" - என்றார். (அ-ஒ-இ)

## பெரமுனவின்...

வின் வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்றும், இது தொடர்பான அறிவிப்பு இன்று புதன்கிழமை காலை வெளிவரும் எனவும் முதலில் தகவல்கள் வெளியாகியிருந்தன. இவ்வாறிருக்கையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தம்மிக்க பெரேரா பின்வாங்கியதையடுத்து நாமலை வேட்பாளராகக் களமிறக்க பெரமுன தீர்மானித்துள்ளதாக உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் எவ்வாறாக அமைந்தாலும், வேட்பாளர் ஒருவரைத் தனித்துக் களமிறக்க வேண்டும் என்று நாமல் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்தார். பொதுஜன பெரமுன, ஜனாதிபதி ரணிலை ஆதரித்ததன் விளைவாக, பெரமுனவுக்குள் ரணிலால் பிளவுகள் ஏற்படுகின்றன என்றும் நாமல் குற்றஞ்சாட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44-26)

## சிறுமியுடன்...

அமையவே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுமி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியின் பரிசோதனைகளுக்காக முற்படுத்தப்பட்டுள்ளார். இளைஞர் எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 19 இந்திய மீனவர்கள் நேற்று விடுதலை!

## 1.2 கோடி ரூபா தண்டம்

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதான 19 தமிழக மீனவர்கள் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருடச் சிறைத் தண்டனை என்ற நிபந்தனையின் அடிப்படையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

இதுதொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது கடந்த ஜூலை மாதம் 22ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மேற்கண்ட நிபந்தனையின் அடிப்படையில் நீதிவானால் விடுவிக்கப்பட்டனர்.

மீன்பிடிக்குப் பயன்படுத்தப்பட்ட படகுகளின் ஓட்டிகள் மூவரும் தலா நான்கு மில்லியன் ரூபா அபராதம் செலுத்த வேண்டுமெனவும், அதனைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒருவருடக் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டி வருமெனவும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளை- கடந்த மாதம் 23ஆம் திகதி நெடுந்தீவில் கைதான ஒன்பது இந்திய மீனவர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 20ஆம் திகதி வரை நீடித்தும் நீதிவான் உத்தரவிட்டார்.

(ஒ-66)

## பாடசாலை செல்லமுடியாது 40 வீதமான பிள்ளைகள்!

கொழும்பு, ஓக.7

பாடசாலை செல்லவேண்டிய வயதிலுள்ள பிள்ளைகளில் 40 வீதமானோர் பாடசாலை செல்லமுடியாத நிலையில் இருக்கிறார்கள். பிறரிடம் உடைகளை வாங்கி அணிகின்ற 20 வீதமானோர் இருக்கிறார்கள் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் விஷாகா அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரண்டு மூன்று பிள்ளைகள் இருக்கின்ற குடும்பங்களில் எந்தப் பிள்ளைக்கு கல்வி புகட்டுவது எனும் கேள்வி எழுகின்றது.

வகுப்பறையில் வேதனைகளை வெளிப்படுத்திக்கொள்ளக்கூட முடியாமல் இருக்கின்ற பிள்ளைகளை நாங்கள் காண்கிறோம். எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப வேண்டுமென்ற ஏகோபித்த எதிர்பார்ப்பு இருக்கின்றது. இந்த எதிர்பார்ப்பை சுமந்துகொண்டு புதிய மறுமலர்ச்சிக்காக மேலும் ஊக்கத்துடன் செயற்பட வேண்டும் - என்றார்.

(ச-இ)

## பணியாளர் தேவை



யாழ். நகரின் மையத்தில் இயங்கும் பத்திரிகை நிறுவனத்திற்கு
1. அச்சு இயந்திர இயக்குநர் (மெசின் மைண்டர்)
2. அச்சு இயந்திர உதவியாளர் தேவை.
பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
வெளி மாவட்டத்தினருக்கு தங்குமிட வசதி உண்டு.

ஆர்வம் உள்ளவர்கள் நாளை 08.08.2024 காலை 9.00 மணிமுதல் பி.ப 01.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்.

தொடர்புகளுக்கு:
**074 173 7684**

CS5680

## வேலைக்கு ஆள் தேவை

மயிலிட்டியில் வசிக்கும் வயோதிபத் தாயை பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை

தொடர்புகளுக்கு:
**077 711 2269**

## விற்பனைக்கு

**தனியார் கல்வி நிறுவனத்தினால் உபயோகிக்கப்பட்டது, உபயோகிக்கப் படாததுமான கட்டட சம்பந்தமான பின்வரும் பொருட்கள் மூடிய கூறுவிலை கோரலின் மூலம் விற்பனை செய்யப்படும்.**

- 2 Brand New Water Tank-10000 Liter
- Used Water Tank with stand-1000 liter
- Glasses (Used for windows)
- Aluminium Louvers
- Concrete Septic Tank (Used)
- Used Gates-1 pair
- பழைய இரும்புகள்

பார்வையிட விரும்புவோர் 239, அரசடி வீதி, கந்தர்மடம் என்ற முகவரியில் காலை 9.00 முதல் மாலை 4.00 மணி வரை பார்வையிடலாம்.


**முடிவுத்திகதி: 14.08.2024**

(CR 43084) V-1

தொடர்புகளுக்கு:
**077 408 1723**

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 03 . 1933



மறைவு 06 . 08 . 2024

### வேலுப்பிள்ளை தனபாலசிங்கம்

(ஓய்வு நிலை அதிபர்)

கொல்லங்கலட்டி தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை அதிபர் வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் அவர்கள் (06.08.2024) செவ்வாய்க்கிழமை அன்று இயற்கையெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி-பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக்கணவரும் ஆவார். கிரிதரன் (தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்) மற்றும் சசிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கம், வன்னியசிங்கம், நாகராசா ஆகியோரினதும் மற்றும் இராஜேஸ்வரி, தங்கரத்தினம் ஆகியோரின் மூத்த சகோதரனும் ஆவார். அன்னார் காலஞ்சென்ற கதிர்காமநாதன், மாணிக்கவாசகர், பரமேஸ்வரி ஆகியோரினதும் மற்றும் யோகநாதர், சண்முகநாதன் ஆகியோரினதும் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னார் சித்திரா (ஆசிரியர், யா/இணுவில் மதிய கல்லூரி), மற்றும் காலஞ்சென்ற அனுரதி (பிரதேச சபை, கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுசன், அபினா, கிருசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னார் யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ்கலவன் பாடசாலை, நு/கோல்புறுக் தமிழ் மகாவித்தியாலயம் என்பவற்றில் அதிபராகவும் க/புசல்லாவை சரஸ்வதி விதியாலயம், க/புசல்லாவை பரிதிருத்துவக் கல்லூரி, பேராதனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைகளில் ஆசிரியராகவும், யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நீண்ட நாள் ஆசிரியராகவும், முன்னாள் கனிஷ்ட பிரிவு அதிபராகவும் சிறப்புறக் கடமையாற்றியவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக் அஞ்சலி நிகழ்வுகள் (07.08.2024) புதன்கிழமை, சுன்னாகத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று மு.ப 11.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(CR 1091) V-1

தகவல்: குடும்பத்தினர்.
077 735 0827, 077 742 7207



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org